**தலைப்பு 247 - இலங்கை சுங்கம்**

**.......................................................**

## 1. நிதிக்கூற்றுக்கள்

**............................**

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

**.......................................................**

இலங்கை சுங்கத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை சுங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை சுங்கத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**.......................................................................**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேறகொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாகபிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

**..................................................................................................**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல்வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு

……………………………………………………………..........................……………….

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) இந் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 வைப்புக்களை பெற்றுக்கொள்ளலும் செலுத்தலும்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மூன்று வைப்புக்கள் தொடர்பாக 2021 சனவரி 01 ஆந் திகதி நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிட்ட மீதிக்கும் ஏசீஏ4 கூற்றின் ஆரம்ப மீதிக்குமிடையே ரூபா 15,389,963 மொத்த தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக அரசாங்க கணக்குகள் திணைக்களம் வழங்கிய 2021/02 ஆம் இலக்க வழிகாட்டிக் கோவையில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்க அக்கணக்குளைத் தயாரிக்க வேண்டியதானது திறைசேரி அச்சுப் பிரதிகளுக்கு இணங்கிய மீதியை அடிப்படையாகக் கொண்டாகும். அதற்கிணங்க ஏசீஏ4 படிவத்தில் அந்த தரவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வைப்புக் கணக்கிற்காகவும் தயாரிக்கப்படுகின்ற நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ளதானது திணைக்கள ஏடுகளுக்கு இணங்கிய மீதியாகும். இவ்வாறு திணைக்கள ஏடுகள் மற்றும் திறைசேரி அச்சுப்பிரதிகளின் பிரகாரம் மீதியில் பல ஆண்டுகளாக வித்தியாசம் காணப்பட்டதுடன் அந்த வித்தியாசத்தில் 2019 ஆம் ஆண்டு வரையான பிழைகளை | மீதியிலுள்ள வித்தியாசங்களை இனங்கண்டு நிறுவனத்தின் நிதி நிலைமையானது சரியாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் அறிக்கையிடப்படும் வகையில் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செம்மையாக்குவதன் மூலம் சரி செய்யப்பட்டுள்ளதுடன் 2018 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்து காணப்பட்டு வரும் பிழைகளை தேடிப்பார்த்து எதில்காலத்தில் செம்மையாக்கல்கள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (ஆ) | மேற்கூறிய வைப்புக் கணக்குகள் தொடர்பாக காணப்பட்ட ஆரம்ப மீதியின் வித்தியாசத்தை தீர்த்து வைக்காது 2021 திசெம்பர் 31 ஆந் திகதியும் காணப்பட்டதுடன் அவ்வாறு வித்தியாசப்படுவதற்கான காரணங்களை உள்ளடக்கிய கணக்கிணக்க அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | அந்த வித்தியாசங்களை ஒப்பீடு செய்து ஒரு அறிக்கை ஒவ்வொரு வைப்புக் கணக்குடனும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | வைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகளின் வித்தியாசத்திற்கான காரணங்களை உள்ளடக்கிய ஒப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் எதிர்காலத்தில் மீதிகளின் வித்தியாசத்தை இனங்கண்டு சரியான கணக்கீட்டினை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டின் போது இலங்கை சுங்கத்தின் 2342 உத்தியோகத்தர்களுக்கு சம்பளம், கூலி, மேலதிக நேர படி, விடுமுறை தினச் சம்பளம், ஊக்குவிப்புப் படி என்பனவாக அரசாங்கத்தின் திரண்ட நிதியிலிருந்து ரூபா 1,839,078,959 தொகையும் சுங்க மேலதிக நேர பரீட்சித்தல் கட்டணம் மற்றும் | இன்றுவரை சுங்க திணைக்களத்தின் ஊழியர் வருகை பதிவு செய்யப்படுவது 18 ஆம் பொதுப்படிவத்தின் மூலமாக இருப்பதுடன் அதனை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேர வேலைப்படிகள் கணிப்பீடு செய்யப்படுகின்றது. எவ்வாறாயினும் சுங்க | (i) அரசாங்கத்தின் பொது பணிப்புரை மறறும் அரசாங்க கணக்குகள் குழுவின் பணிப்புரையை பின்பற்றுதல் அதிக அளவில் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும். (ii) நிதி ஒருங்கீனங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் நிதியத்தின் மூலம் ரூபா 1,086,992,639 தொகையுமாக ரூபா 2,926,071,598 மொத்த தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த செலவுகள் சம்பந்தமாக உறுதிப்படுத்தும் சான்றுகளான சேவைக்கு சமூகமளித்தமையினை உறுதிப்படுத்தும் விரல் அமையாளமிடும் அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | திணைக்களத்தின் மேலதிக நேர கொடுப்பனவு சம்பந்தமான சிபாரிசுகளைச் சமர்ப்பிப்பதற்காக 2022-02-14 ஆந் திகதி சுங்கத்தின் அனைத்து உத்தியோகத்தர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒரு குழு தயார்படுத்தப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட மேலதிக நேர வேலை கொடுப்பனவு சம்பந்தமாக முறையான ஒரு நடைமுறையினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சம்பந்தமாக தாபன விதிக்கோவையின் நிதிப்பிரமாணங்களிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.<br>(iii) ஊழியர் முகாமைத்துவம் சம்பந்தமாகக் காணப்படுகின்ற திருப்தியற்ற உள்ளகக்கட்டுப்பாட்டினை முறைமைப்படுத்துதல். |
| (ஆ) | South Asia Logistics Terminal வாகனம் மற்றும் கொள்கலன் தரிப்பிடம் சம்பந்தமாக பின்வரும் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| | (i) வாகன தரிப்பிடம் மற்றும் அதில் நிறுத்தி வைக்கின்ற வாகனங்கள் மற்றும் கொள்கலன்களுக்காக சவுத் ஏசியா லொஜிஸ்டிக் டேர்மினல் நிறுவனத்திடம் காப்புறுதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததா என்பதனை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சான்றுகளும் அடிக்கடி திருத்தம் செய்யப்பட்ட அனைத்து உடன்படிக்கைகளும் சட்டதரணியின் முன்னிலை கையொப்பமிட்டு காணிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டமைக்கான சான்று. | இந்த விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அமானா தக்காபுல் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள காப்புறுதி சான்றிதழின் பிரதி கோவையில் உள்ளடங்கியுள்ளது. இந்த குத்தகை உடன்படிக்கையானது இலங்கை சுங்கம் மற்றும் South Asia Logistics Terminal (Pvt.) Ltd நிறுவனம் ஆகிய இரு தரப்பினர்களுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையாகும். அந்த உடன்படிக்கையானது காணிகளைப் பதிவுசெய்யும் அலுவலகத்தில் பதிவு செய்யப்படாமையால் அதன் சட்ட ரீதியான தன்மைக்கு சிக்கல் | உரிய முறையில் உறுதிப்படுத்தலை மேற்கொள்வதற்கு தேவையான சான்றுகளை சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஏற்படமாட்டாது. | |
| (ii) 2021 ஆம் ஆண்டில் இலங்கை வங்கியில் மற்றும் மக்கள் வங்கியில் காணப்பட்ட கணக்குகளிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ள கொடுப்பனவுகள் தொடர்பாக முறையே 11 மாதங்கள் மற்றும் 08 மாதங்களுக்கான கொடுப்பனவு வவுச்சர்கள் | 2021 ஆம் ஆண்டு தொடர்பாக மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கியில் காணப்பட்ட கணக்குகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பான வவுச்சர்கள் கோவை செய்யப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. எனினும் அந்த வவுச்சர்களைச் சமர்ப்பிக்கும் போது ஏடுகளுக்கு கொண்டு வரப்படாது வழங்கப்பட்டதனால் 2022 ஆம் ஆண்டிலிருந்து ஏடுகளில் பதியப்பட்டு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உரிய கொடுப்பனவு வவச்சரர்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.** **நிதி மீளாய்வு**

**.........................**

**2.1** **வருமான முகாமைத்துவம்**

**............................................**

**2.1.1** **வருமான பெறுவனவுகள்**

**........................................**

சுங்க பணிப்பாளர் நாயகம் 13 வருமான குறியீடுகள் தொடர்பான வருமான கணக்கீட்டு உத்தியோகத்தராக செயற்பட்டுள்ளார். அந்த வருமான குறியீடுகள் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொடக்க மதிப்பீட்டு வருமானமும் திருத்திய மதிப்பீட்டு வருமானமும்.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| ...................................... | ............................................ | ..................... |
| 10 வருமானக் குறியீடுகள் தொடர்பான தொடக்க மதிப்பீட்டிற்கும் திருத்திய மதிப்பீட்டிற்குமிடையே ரூபா 306,497 மில்லியன் அல்லது 18 சதவீதத்திலிருந்து 78 சதவீதம் வரையான வீச்சுடைய குறைந்த முரண்களும் 03 வருமான குறியீடுகள் தொடர்பாக தொடக்க | பதில் வழங்கப்படவில்லை. | மதிப்பீடானது ஆழமான அறிவுடன் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

மதிப்பீட்டிற்கும் திருத்திய மதிப்பீட்டிற்குமிடையே ரூபா 10,019 மில்லியன் அல்லது 13 சதவீதத்திலிருந்து 20 சதவீதம் வரையான வீச்சுடைய கூடுதல் முரண்களும் அவதானிக்கப்பட்டன.

**(ஆ) திருத்திய மதிப்பீடு செய்யப்பட்ட வருமானமும் உள்ளபடியான வருமானமும்.**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| ...................................... | ............................................ | ..................... |
| 10 வருமானக் குறியீடுகள் தொடர்பாக மீளாய்வாண்டிற்கான திருத்திய மதிப்பீட்டு வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்குமிடையே 5 சதவீதத்திலிருந்து 36 சதவீதம் வரையான வீச்சுடைய குறைந்த முரண்களும் 02 வருமான விடயங்கள் தொடர்பாக 10 சதவீதத்திலிருந்து 136 சதவீதம் வரையான வீச்சுடைய கூடுதல் முரண்களும் அவதானிக்கப்பட்டன. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | மதிப்பீடானது ஆழ்ந்த அறிவுடன் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

**(இ) முன்னைய ஆண்டிற்கான வருமானமும் மீளாய்வாண்டிற்கான வருமானமும்**

...................................................................................................................

மீளாய்வாண்டிற்கான வருமானத்தையும் முன்னைய ஆண்டிற்கான வருமானத்தையும் ஒப்பீடு செய்த போது 07 வருமானக் குறியீடுகள் தொடர்பான வருமானத்தில் ரூபா 113,898 மில்லியன் தொகையான குறைவு அவதானிக்கப்பட்டதுடன் அது 6.15 சதவீதத்திலிருந்து 89.30 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது. கொரோனா தொற்றுநோய் நிலைமை மற்றும் இறக்குமதியை மட்டுப்படுத்தலின் அடிப்படையில் மேற்கூறிய தலைப்பிற்குரிய வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்திருந்தும் சில தலைப்புக்களின் வருமானங்களைச் சேகரித்தல் பொதுவாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரித்திருந்தன. அதற்கிணங்க 06 வருமானக் குறியீடுகள் தொடர்பாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 67,626 மில்லியன் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டதுடன் அது 10.39 சதவீதத்திலிருந்து 55.03 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ...................................... | ................................ | ..................... |
| (i) மீளாய்வாணடின் போது இலங்கை சுங்கத்தினால் சேகரிக்கப்பட்ட ஒட்டுமொத்த வருமானம் ரூபா 522,419,305,884 ஆக இருந்ததுடன் அதில் பெற்றோலிய உற்பத்தி பொருள் வரி குறியீட்டின் கீழ் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 55,339,152,821 ஆகும். அது ஒட்டுமொத்த வருமானத்தில் 10.59 சதவீதமாகும். அதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4.20 சதவீத முன்னேற்றம் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. | விசாரிக்கப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட புள்ளிவிபரங்கள் சரியானதுடன் கணக்காய்வு அவதானிப்புக்களும் சரியானவைகளாகும். | காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை இன்னும் வலுப்படுத்துவதற்கு முயற்சி எடுத்தல் வேண்டும். |
| (ii) மீளாய்வாண்டின் போது இலங்கை சுங்கத்தினால் துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி வருமான குறியீட்டின் கீழ் ரூபா 154,125,248,777 தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 115,442,010,554 ஆக இருந்ததனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 38,683,238,223 ஆல் அல்லது 33.51 சதவீதத்தால் ஒரு அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (iii) மீளாய்வாண்டின் போது இலங்கை சுங்கத்தினால் வருமான குறியீட்டின் கீழ் ரூபா 6,233,595,884 வருமானம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது இந்த வருமான குறியீட்டின் கீழ் ரூபா 4,726,948,232 தொகை | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | சேகரிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஏனைய வருமானங்களின் கீழ் சேகரிக்கப்பட்ட வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 1,506,647,652 ஆல் அல்லது 31.87 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. | | |
| (iv) | இலங்கை சுங்கத்தின் ஒட்டு மொத்த வருமானத்தில் ரூபா 73,320,213,280 தொகை அல்லது 14.03 சதவீதம் இறக்குமதி செஸ் வரியின் மூலம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது அந்த வரி வருமானம் ரூபா 26,025,088,439 ஆல் அல்லது 55.3 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (v) | மொத்த வருமானத்தில் 0.43 சதவீதம் அதாவது ரூபா 2,223,285,662 தொகை ஏற்றுமதி செஸ் வரி வருமானக் குறியீட்டின் கீழ் சேகரிக்கப்பட்டிருந்தது. இந்த வருமானக் குறியீட்டின் கீழ் 2020 ஆம் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 2,013,974,216 ஆக இருந்ததுடன் அதனை மீளாய்வாண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 209,311,446 ஆல் அல்லது 10.39 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. | -மேற்படி- | -மேற்படி- |
| (vi) | தண்டப் பணம் மற்றும் பறிமுதல் வருமானத்தின் மூலம் ரூபா 4,091,286,910 தொகை ஆண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த வருமானத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 1,202,068,262 அல்லது 41.61 சதவீத அதிகரிப்பாகும். | -மேற்படி- | -மேற்படி- |

(ஈ) நிலுவை வரி வருமானம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (i) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டு மொத்த நிலுவை வரிப் பெறுமதியில் ரூபா 22,798,815,861 தொகை அல்லது 37 சதவீதம் பிரதிநிதித்துவப்படுத்துவது இறக்குமதி வரி வருமானத்தினையாகும். அதிலும் ரூபா 22,796,724,648 தொகை 2018 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்து காணப்பட்டு வருபவையயாகும். | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகிறேன். இந்த நிலுவை வரி சம்பந்தமாக உரிய அமைச்சு/ திணைக்களத்திற்கு அடிக்கடி உரிய நிலுவைப் பணத்தை செலுத்துமாறு தெரியப்படுத்தியிருந்த போதிலும் இதுவரை அந்த நிலுவைப் பணத்தை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எவ்வாறாயினும் இந்த வரிப்பணத்தை செலுத்துமாறு இன்னும் உரிய நிறுவனங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும் இந்த நிலுவைப் பணத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக நிதி அமைச்சின் முகாமைத்துவ கணக்காய்வின் ஆலோசனையின் அடிப்படையில் தேசிய பாதீட்டு முகாமைத்துவ கணக்காய்வு மற்றும் இலங்கை சுங்கம் ஆகிய திணைக்களங்களின் உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய ஒரு குழு நியமிக்கப்பட்டு அதன் மூலம் உரிய நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை தாமதமின்றி சேகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ii) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை வரி வருமானத்தில் ரூபா 10,273,512,929 தொகை அதாவது 17 சதவீதம் பிரதிநிதித்துவப்படுத்துவது துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களை அபிவிருத்தி செய்தல் வரிப் பணத்திலிருந்தானதுடன் அதிலும் ரூபா 10,271,520,471 தொகை 2018 ஆம் ஆண்டிற்கு முன்னர் நிலுவையாக இருந்த வருமானம் ஆனதுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையும் அந்த வருமானத்தை அறவீடு செய்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | -மேற்படி- | நிதிப்பிரமாணம் 128 மற்றும் 01/2015 ஆம் இலக்க நிதி சுற்றறிக்கையில் குறிப்பிட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை அல்லது 8 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துவது உற்பத்தி விசேட ஒழுங்குவிதி மோட்டார் வாகன வரிப் பெறுமதியாக இருப்பதுடன் அதில் ரூபா 4,711,353,914 தொகை 2019 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்து காணப்படுகின்றது. பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்துடன் பின்னர் அறவீடு செய்யும் அடிப்படையில் அரசாங்க நிறுவனங்களுக்கு பொருட்களை விடுவித்தல் இதற்கான காரணமாக இருந்தது. | -மேற்படி- | நிலுவை வரியினை அறவீடு செய்வதற்கு விசேட ஒழுங்குவிதிகள் பின்பற்றுதல் மற்றும் அறவீடு செய்யும் அடிப்படையில் பொருட்களை விடுவித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறையை வலுப்படுத்துதல் வேண்டும். |
| (iv) நிலுவை வரி வருமானம் வருடாந்தம் ஒன்று சேர்ந்து வருவதுடன் 2021 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 22,933,854,690 ஆக | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இனங்குகிறேன். 2021-2021-01-01 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 22,933,854,690 | நிதிப்பிரமாணம் 128 மற்றும் 01/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையில் |

| | | |
|---|---|---|
| காணப்பட்ட நிலுவை வரி வருமானமானது 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 60,884,927,433 வரை அதாவது 165 சதவீத அளவினால் அதிகரித்திருந்தது. 2016 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து அரசாங்க நிறுவனங்களுக்கு பின்னர் வரியை அறவீடு செய்யும் அடிப்படையில் இறக்குமதியை விடுவித்தல் நிறுத்தப்பட்டிருந்தும் அதற்கு முரணாக இலங்கை பொற்றோலியக் கூட்டுதாபனத்திற்கு 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது இறக்குமதியை விடுவித்தலானது எண்ணை சுத்திகரிப்பின் அடிப்படையில் அறவிடப்படுகின்ற உற்பத்தி வரி மற்றும் ஏனைய உற்பத்தி வரிகள் நிலுவையாகக் காணப்பட்டன என்பது அவதானிக்கப்பட்டது. நிலுவை வரி வருமானமானது 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 9 சதவீதத்திலிருந்து 165 சதவீதம் வரை பாதகமான அதிகரிப்பாகக் காணப்பட்டது. | ஆகக் காணப்பட்ட நிலுவை வருமானம் 2021-12-31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 60,884,927,433.08 ஆக அதிகரித்திருந்தமையானது பின்னர் வெளிப்படுத்தப்பட்ட தரவுகளின் அடிப்படையில் வெளியீட்டுப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் காரணத்தினாலாகும். 2021 நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் 2021-01-01 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த நிலுவை வருமானம் ரூபா 63,458,697.177.91 ஆகும். 2021-12-31 இல் உள்ளவாறான ஒட்டு மொத்த நிலுவை வருமானம் ரூபா 60,884,927,433.08 ஆகும். அதற்கிணங்க 2021 ஆம் ஆண்டின் நிலுவை வருமானமாக ரூபா 2,573,769,744.83 தொகை அறவீடு செய்யப்பட வேண்டியுள்ளது. | குறிப்பிட்ட அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.2 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதி ஏற்பாடு சேமிக்கப்படுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (i) மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் செலவுகளுக்காக ரூபா 3,298,300,000 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 18 | மீண்டுவரும் செலவுகள் இதற்கான காரணம் நிதிக்கூறுக்களின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | மதிப்பீடுகள் ஆழ்ந்த அறிவுடன் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சதவீதமான ரூபா 590,570,111 தொகை செலவு செய்யப்படாது சேமிக்கப்பட்டிருந்தது. 15 மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக ரூபா 2,929,347,474 மொத்த தொகையான தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 2,341,480,889 தொகை பயன்படுத்தப்பட்டதனால் ரூபா 587,866,585 தொகையான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது தேறிய நிதி ஏற்பாட்டில் 05 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சுடைய அளவாகும். | | |
| (ii) | 09 மூலதன விடயங்களுக்கான ரூபா 195,100,000 தொகையான மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 43,986,312 மொத்த தொகை பயன்படுத்தப்பட்டதனால் ரூபா 151,113,688 தொகை சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது தேறிய நிதி ஏற்பாட்டில் 31 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சுடைய அளவிலானதாக இருந்தது. | இதற்கான காரணம் நிதிக்கூற்றுக்களின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

..........................................................................................

பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான தகவல்களை அறிக்கையிடல்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| ...................................... | ................................ | ..................... |
| 2019 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குரிய வழிகாட்டிகளில் உள்ளடக்கப்பட்ட 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் செலவுத் தலைப்புக்களால் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படுகின்ற கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான தகவல்களை (குறிப்பு இலக்கம்- (iii)) திறைசேரியினால் வழங்கப்படுகின்ற | 2021 பொறுப்புக்கள் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தும் புதிய சிகாஸ் கணனி முறைமைக்கு பதிவேற்றம் (Up load) செய்யும் போது அதில் காணப்பட்ட தொழில்நுட்ப தவறுகளினால் இத்திணைக்களத்திற்குரிய | 255/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மேற்கூறிய கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் (SA 92) மூலம் வெளியிடப்பட வேண்டிய போதிலும் 2021 நிதிக்கூற்றுக்களுடன் SA 92 கூற்றுக்களைச் சம்ரப்பிப்பதற்கு நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புக்களை UpLoad செய்து வருடாந்த கணக்குகளை சமர்ப்பிக்கின்ற திகதி வரை உரிய மென்பொருள் பிரதியை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. எனவே 2021 நிதிக் கூற்றுக்களுக்கு SA 92 கூற்றில் உள்ளடக்குவதற்கு முடியாதிருந்தது. அது பற்றி கணக்காய்வுப் பிரிவிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | |

(ஆ) நிதி ஏற்பாட்டினை மிகைத்து பொறுப்புக்களை மேற்கொள்ளல்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் இலக்கம் 94(1), 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கை 2017 திசெம்பர் 22 ஆந் திகதிய 263/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 03 (ஊ) பந்தி. 2018 ஒக்தோபர் 19 ஆந் திகதிய 266/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 4(iii) ஆம் பந்தி மற்றும் 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தி ஆகிய சுற்றறிக்கை ஒழுங்குவிதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுக்கு முரணாக 2021 ஆம் ஆண்டின் போது இலங்கை சுங்கத்தினால் 06 செலவு விடயங்கள் தொடர்பாக நிதி ஏற்பாட்டினை மிகைத்து ரூபா 19,642,855.33 தொகையான பொறுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | உரிய ஆண்டிற்கான நிதி ஏற்பாடு முடிவடைந்ததன் பின்னர் மேலதிக நிதி ஏற்பாட்டிற்காக திறைசேரியின் அங்கீகாரம் கிடைக்காதிருக்கையில் உரிய செலவுகளுக்காக அடுத்துவரும் ஆண்டின் போது பொறுப்புக்களாக அச்செலவுகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. | நிதி ஏற்பாட்டினை மிகைத்து பொறுப்புக்களை மேற்கொள்ளாத வகையில் கவனித்து பார்த்தல் வேண்டும். |

(இ) ஏனைய கடப்பாடுகளும் பொறுப்புக்களும்

......................................................................

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| ...................................... | | ................................ | ..................... |
| (i) | 2021 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளுடன் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பதிவேட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படாத பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 78,575,047.94 ஆகும். இறுதிக் கணக்கில் காட்டப்பட்டுள்ளது. எனினும் 2021 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பதிவேட்டில் பொறுப்புக்களாக காட்டப்பதாத பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 65,787,871 ஆகும். | நிதிக் கூற்றுக்களைத் தயாரித்ததன் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை. இறுதிக் கணக்குகளில் சுட்டிக் காட்டப்பட்ட எனினும் பொறுப்புக்கள் பதிவேடுகளில் உள்ளடக்கப்படாத பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 65,987,108.00 ஆகக் காட்டப்பட்டிருந்தும் அதில் 247-01-01-1003 ஆம் செலவு விடயத்தின் கீழ் ரூபா 170.695 பணம் மற்றும் 247-01-01-003-1403 ஆம் செலவு விடயத்தின் கீழ் ரூபா 28,542 பணம் பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஏனைய விடயங்கள் சரியா என்பதனைப் பரீட்சிப்பதற்கு காலம் போதாது என்பதனால் எதிர்காலத்தில் பதிலை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகளைத் தயாரிக்கும் போது சரியான தன்மை தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (ii) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களாகக் காட்டப்பட்டுள்ள ரூபா 404,793,750 மீதியில் 2021 ஆம் ஆண்டில் தீர்த்துவைக்கப்பட்ட முறைமையினை ஏடுகளில் உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது. | பரீட்சித்துப் பார்த்து எதிர்காலத்தில் பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (iii) | திணைக்களத்தினால் ஒரு வெளிநாட்டு நிறுவனத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட சம்பவக் கோவை சம்பந்தமாக உரிய | இதில் குறிப்பிட்ட பணம் ரூபா 31,732,060 ஆக சரிசெய்யப்பட வேண்டியதுடன் | கொடுப்பனவுகளை இனங்காண்பதற்கு வவுச்சர்கள் சமர்ப்பிக்கப்படும் |

| | | |
|---|---|---|
| நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 31,732,060 பணம் ஒரு கடப்பாடு அல்லது பொறுப்பாக கணக்குகளில் காட்டப்படவில்லை. | அப்பணத்திற்குறிய வவுச்சர் 2022-03-31 ஆந் திகதி சமர்ப்பித்ததனால் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை. | வரை இருத்தல் சரியான நடைமுறை அல்லாததனால் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை மேம்படுத்துவதற்கு கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

..............................................................................................................

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஒழுங்கு விதிகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

..........................

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு** | **இணக்கமின்மை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|---|
| | .......................... | ........................ | ........................... | ...................... |
| (அ) | அரசியலமைப்பின் 04 ஆம் அத்தியாயத்தின் 18(1) ஆம் பிரிவு மற்றும் 19 ஆம் பிரிவு | இலங்கையின் உத்தியோகபூர்வ மற்றும் அரசகரும மொழி சிங்கள மொழி எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் இலங்கை சுங்கத்தின் கட்டளைச் சட்டம் சிங்கள மொழியில் வரைபாக்கப்பட வில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | சுங்க கட்டளைச் சட்டம் ஆங்கில மொழியில் மாத்திரம் அச்சிடப்பட்டுள்ளது என அரசாங்க வெளியீட்டு பணியகத்திடம் விசாரித்ததன் பின்னர் தெரிவிக்கப்பட்டது. கட்டளைச் சட்டத்தின் 99% ஆனவை இன்றுவரை ஆங்கில மொழியில் மாத்திரம் அச்சிடப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. மேலும் மேற்கூறிய சுங்க கட்டளைச் சட்டத்தின் மொழி பெயர்ப்பாக சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்ட பயன்படுத்துவதற்கு இலகுவான ஒரு | அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் 150 ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த ஆங்கில மொழியில் மாத்திரம் காணப்படுகின்ற சுங்க கட்டளைச் சட்டத்தை ஏனைய மொழிகளின் மூலம் வழங்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கையேடு இலங்கை சுங்கத்தில் பயன்படுத்தப்படுகின்றது எனவும் குறிப்பிடுகிறேன். | |
| (ஆ) | சுங்க கட்டளைச் சட்டத்தின் 105(4) ஆம் பிரிவு | நிறுத்திவைக்கப்பட்ட 575.5 கிலோகிராம் நிறையுள்ள எனசால் இருப்பு 2021 ஏப்ரல் 05 ஆந் திகதி பறிமுதல் செய்யப்பட்டு ஒரு கிலோ கிராம் ரூபா 10,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் சேதமடைந்த அல்லது பழுதடைந்த பொருட்கள் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் உடனடியாக விற்பனை செய்ய வேண்டி இருந்த போதிலும் ஒரு மாதத்திற்குள் முறையான நடவடிக்கை எடுக்கப்படாமையால் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டிருந்தது. | 57.5 கிலோகிராம் நிறையுள்ள எனசால் இருப்பு 2020-08-17 ஆந் திகதிய 21/89/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் 2021 ஏப்ரல் 09 ஆந் திகதி பறிமுதல் செய்யப்பட்டது. இதற்காக பயிர் தனிமைப்படுத்தல் அங்கீகாரம் கிடைத்திருந்தது. எனினும் உற்பத்தி நாட்டின் சான்றிதழ் (Country of Origin) கிடைத்திருக்கவில்லை. | சுங்க கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2019 ஏப்ரல் 04 ஆந் திகதிய 2117/48 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலலலலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் (அ) மற்றும் (ஆ) பந்திகள் | வர்த்தமானியின் பிரகாரம் மற்றும் DOPL 1321 ஆம் இலக்க திணைக்கள பணிப்புரையின் பிரகாரம் உத்தேச வரி நிவாரணத்தின் கீழ் இலங்கை சுங்கத்தால் விடுவிக்கப்படுகின்ற அனைத்து மேட்டார் வாகனங்களும் விடுவிக்கப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் காட்டப்பட்டுள்ளவாறு தனிப்பட்டவர்களின் பெயரில் பதிவு செய்யப்படுதல் வேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்படாத மோட்டார் வாகனங்கள் விடுவிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்திலேயே உற்பத்தி வரி செலுத்துதல் வேண்டும். | இந்த பிரச்சினைக்குரிய வங்கிப் பிணையை விடுவித்தலானது சாதாரண வங்கி பிணையை விடுவிக்கும் நடைமுறைக்கு இணங்க சுங்க பணிப்பாளரினால் (வெளியீடு) மேலதிக சுங்க பணிப்பாளர் நாயகம் வரையும் விடயத்தை அறிக்கையிட்டு அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் இடம்பெற்றது. இது தொடர்பாக 2020-09-26 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தெரிவிக்கப்பட்டது. | இந்த வாகனத்தை விடுவிப்பது தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தி கொள்ளமுடியாதிருந்ததனாலும் பதில் தொடர்பற்றதாக இருந்ததனாலும் இது சம்பந்தமாக மீண்டும் பரீட்சித்தல் செய்ய வேண்டி இருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எனினும் 2019 செப்தெம்பர் 02 ஆந் திகதிய 21/215 ஆம் இலக்க சுங்க குறிப்பு தொடர்பாக Nissan Used XI Trial வாகனத்தின் பதிவு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் நிராகரிக்கப்பட்டிருந்தும் அந்த வாகனத்திற்கான வங்கி பிணை விடுவிக்கப்பட்டதனால் ரூபா 8,112,446 தொகையான வரிப்பணத்தை அரசாங்கம் இழந்திருந்தது. | கொழும்பு மோசடிகள் புலனாய்வுப் பிரிவினால் IR/06/04/20 ஆம் இலக்க புலனாய்வு தொடர்பான வழக்கின் தீர்ப்பினை வழங்குதல் 2022-03-18 ஆந் திகதிக்கு நிர்ணயிக்கப்பட்டிருந் தும் அத்தீர்ப்பின் பிரதி டீ, பிரிவிற்கு கிடைத்திருக்காததனா ல் நிலையப் பொறுப்பாளர், கொழும்பு மோசடி புலனாய்வுப் பிரிவு மற்றும் சுங்க அத்தியட்சகர் (சட்ட பிரிவு) மூலம் விசாரிக்கப்பட்டது. எவ்வாறாயினும் இதுவரை அது சம்பந்தமாக எந்த பதிலும் **டீ** பிரிவிற்கு கிடைத்திருக்கவில்லை ல. | |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை .............................. | | | |
| | (i)XXIV ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் பந்தி | 01 ஆண்டிற்கு குறைவான ரூபா 891,902 தொகை மற்றும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 520,462 தொகையான ஓய்வுபெற்று சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை . | 01 ஆண்டிற்கு குறைந்த மீதியான ரூபா 1,633,501.00 பணத்தில் ரூபா 741,599.00 மீதியானது தற்பொழுது தீர்த்துவைக்கப்பட்டுள் ளது. இன்னும் தீர்த்துவைக்கப்படாத கடன் மீதி ரூபா 891,902.00 ஆக இருந்ததுடன் அக்கடன் மீதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் | தாபன விதிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மீதியான ரூபா 520,462.00 கடனை அறவீடு செய்தல் சம்பந்தமாக மனித வளங்கள் முகாமைத்துவ பிரிவில் மேற்கொண்ட விசாரணைக்கு இணங்க அவரினால் ஓய்வூதிய திணைக்களத்திற்கு 2022-04-06 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் இதில் 03 ஆண்டுகளுக்கும் 04 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட இடைப்பட்ட ரூபா 68.800 தொகையும் 04 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 106,220 தொகையும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,411,666 தொகையுமான கடன் மீதிகள் காணப்பட்டன. | 03 ஆண்டுகளுக்கும் 04 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட கடன் மீதியான ரூபா 68,800 சம்பந்தமாக தற்பொழுது தொடக்க புலனாய்வு முடிவடைந்து அந்த அறிக்கை 2017-11-23 ஆந் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு தெரியப்படுத்தப்பட்டது. 04 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட கடன் மீதியான ரூபா 106,220.00 பணம் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது தொடர்பாக 2021-12-22 ஆந் திகதிய பதவியணி சேவை பணிப்பளருக்கு தெரியப்படுத்தப்பட்டது. 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் மீதியான ரூபா 1,411,666.00 பணம் சம்பந்தமாக ஒழுக்காற்று | தாபன விதிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்து நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடவடிக்கை எடுப்பது தொடர்பாக 2021-12-22 ஆந் திகதி பதவியணி சேவை பணிப்பளருக்கு தெரியப்படுத்தப்பட்டது. | |
| | (ii) XXVIII ஆம் அத்தியாயம் | மத்திய தபால் பரிமாற்றில் ஸ்தாபிக்கப்பட்ட சுங்க அலுவலகத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லலினை முறைப்படியாக பதிவுசெய்வதற்காக தாபன விதிக்கோவையின் XXVIII ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் வருகைப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமானக் கோவையின் நி.பி 133(2) (viii) | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் தேவையான சந்தர்ப்பங்களின் போது விசேட புலனாய்வினை நடாத்த வேண்டிய போதிலும் 2019/2020 இரண்டு ஆண்டுகளுக்காக ஒரு விசேட புலனாய்வு மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டில் விசேட புலனாய்வு நடாத்தப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட சீரற்ற சூழ்நிலையில் விசேட புலனாய்வினை நடாத்துவதற்கு முடியாதிருந்ததுடன் திட்டமிட்ட கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டன. 2022 ஆம் ஆண்டிலிருந்து உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் விசேட புலனாய்வுகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க அரசாங்க நிருவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் சுற்றறிக்கை | அரசாங்க நிறுவனங்களிலுள்ள அனைத்து உத்தியோகத்தர்களும் விரல் அடையாளமிடும் இயந்திரங்களைப் பாவித்து வருகை மற்றும் வெளிச்செல்லலினை | இலங்கை சுங்க திணைக்களத்தில் காணப்பட்ட விசேடத்துவமான கடமை நிலைமையின் அடிப்படையில் | அரசாங்க நிருவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| பதிவு செய்ய வேண்டிய போதிலும் இலங்கை சுங்கத்தில் எந்த உத்தியோகத்தரும் அவ்வாறு செய்திருக்கவில்லை. | 9/2009 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையிலுள்ள ஒழுங்குவிதிகளை அமுல்ப்படுத்துவது சம்பந்தமாக உள்ள சிக்கல் தொடர்பாக அரசாங்க நிருவாக அமைச்சின் செயலாளருக்கு விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டது அது சம்பந்தமாக கவனித்துப் பார்ப்பதற்காக தாபனங்கள் பணிப்பாளர் நாயகத்தினால் மேலும் தகவல்கள் விசாரிக்கப்பட்டன. அதற்கிணங்க இலங்கை சுங்க திணைக்களத்தின் அனைத்து பிரிவுகளிலிருந்தும் உரிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அத்தகவல்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அரசாங்க நிருவாக அமைச்சிற்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதன் பின்னர் அரசாங்க நிருவாக அமைச்சிடமிருந்து கிடைக்கின்ற அறிவுறுத்தல்களுக்கு இணங்க மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே சுங்க பணிப்பாளர் நாயகத்தின் | எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | AB/6A/FP/2020 ஆம் இலக்க 2022-03-14 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் முதலாவது கட்டமாக இலங்கை சுங்க தலைமையகத்தில் 08 பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் விரல் அடையாளமிடும் இயந்திரத்தின் மூலம் உத்தியோகத்தர்களின் வருகையைப் பதிவு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் தற்பொழுது நாட்டில் உருவாகியுள்ள சிக்கலின் காரணமாக அதனை அமுல்ப்படுத்துவது சம்பந்தமாக நடைமுறைச் சிக்கல் உருவாகியுள்ளது என தெரிவிக்கிறேன். | |
| (எ) | 2015 யூலை 14 ஆந் திகதிய PED/RED/01/04/2015/01 ஆம் இலக்க சுற்றறிக்கை, 03/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையினால் திருத்திய நி.பி 371(2) | குறித்த செயலுக்கான உப கட்டுநிதியானது உரிய விசேட செயற்பாட்டிற்கு அண்மித்த திகதியில் உத்தியோகத்தர்களுக்கு வழங்க வேண்டியதுடன் உத்தியோகத்தர்களால் அச்செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட உடன் கட்டு நிதியை தீர்த்துவைக்க வேண்டிய போதிலும் திணைக்களத்தின் 15 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,447,300 முற்பணத்தை தீர்த்துவைப்பதற்கு 30 நாட்களிலிருந்து 217 நாட்கள் வரையான காலம் எடுத்திருந்தது. | 03/2015 ஆம் இலக்க அரசாங் நிதி சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371 (2) இன் பிரகாரம் திறைசேரி செயற்பாட்டு பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் 2021-01-26 ஆந் திகதி ஈடுபடுத்தப்பட்டிருந்த சர்வதேச சுங்க தினத்தை கொண்டாடுவதற்காக ரூபா 600,000 தொகையான குறித்த | அரசாங்க நிதி சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | செயலுக்கான உப கட்டுநிதி வழங்கப்பட்டது. | |
| (ஏ) | நி.பி 485(4) மற்றும் 2004 ஒக்தோபர் 01 ஆந் திகதிய 118 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் 1:1:6 மற்றும் 1:1:7 ஆம் பந்திகள் | ஒரு உத்தியோகத்தர் இடமாற்றம் பெற்றுச் சென்று 03 மாதங்கள் கடந்ததன் பின்னர் திணைக்களங்களுக்கிடையே தீர்த்துவைக்கப்படாத கடன் மீதி இல்லாதிருப்பதற்கு கவனித்துக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 405,307 தொகையான தீர்த்து வைக்கப்படாத மீதி காணப்பட்டது. | 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் மீதி 405,307.00 தொகை சம்பந்தமாக 2022-03-11 ஆந் திகதி தகவல்களைக் கோரி மனிதவளங்கள் முகாமைத்துவ பிரிவிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பிரகாரம் இந்த உத்தியோகத்தர்கள் தொடர்பான கோவைகளை தேடிக்கண்டு பிடிக்க முடியாது எனவும் அப்பிரிவினால் இன்னும் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | பாதீட்டு சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரணமானத்தின் பிரகாரம் நடவடிக்கைஎடுத்தல் வேண்டும். |
| (ஐ) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8 ஆம் அத்தியாயம் | SALT வாகனம் மற்றும் கொள்கலன்கள் பிரிவிலுள்ள வாகங்களை விடுவிக்கும் போது நிறுத்தி வைக்கப்பட்ட நாட்களின் எண்ணிக்கையின் பிரகாரம் கட்டணங்களைச் செலுத்துவதற்கு சுங்க மேலதிக பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் இல்லாத 2015 மே 08 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டிருந்தும் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் பிரிவின் பிரகாரம் முறையான உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த | சேவைகள் வழங்கல் பிரிவினால் மாதாந்த வரிப்பணம் மாத்திரம் செலுத்தப்படுவதுடன் பெறுகை நடைமுறைகளுக்கு மாற்றமாக எக்கொடுப்பனவும் செய்யப்படவில்லை. South Asia Logistics Terminal (Pvt) Ltd நிறுவனத்துடன் சுங்கம் 2015-01-05 ஆந் திகதியிலிருந்து உடன்படிக்கை செய்து கொண்டுள்ளதனால் தனியான உடன்படிக்கைக்கு இணங்கிக் கொள்ளவில்லை. இந்த உடன்படிக்கை செய்த காணியிலும் | முறைப்படியாக உடன்படிக்கை செய்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ன. | கொள்கலன் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. எனவே மீண்டும் உடன்படிக்கை செய்வது தேவையற்றதாகும். | |
| (ஏ) | சுங்க திணைக்களத்தின் கட்டளை 375 (3) | அனைத்து பிரிவுகளிலும் உப அலுவலகங்களிலுமுள்ள உத்தியோகத்தர்கள் அலுவலக வளவிற்கு வெளியே செல்லுவது சம்பந்தமாக வெளிச் செல்லல் பதிவேடு பேணப்பட்டு பதவி நிலை உத்தியோகத்தர் அல்லது நிலையத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரால் அது பற்றி மேற்பார்வை செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை சுங்கத்தின் மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவினை உள்ளடக்கி சில பிரிவுகள் வெளிச் செல்லும் பதிவேட்டினை பேணிவருவதுடன் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு வெளிச்செல்லல் பதிவேட்டினைப் பேணுவதற்காக தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுங்க திணைக்களத்தின் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 1968 இன் 17 ஆம் இலக்க சுங்க கட்டளைச் சட்டத்தின் 153(2) (ஆ) பிரிவின் பிரகாரம் வெகுமதி நிதியத்திலிருந்து வெகுமதியாக பணத்தை பகிர்ந்தளிப்பதற்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டினை பெற்றுக்கொள்வதற்கு பொருத்தமான நடைமுறை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் சுங்க வெகுமதிப்பணத்தை பகிர்ந்தளிப்பதற்காக வழங்கப்பட்ட 1988 சனவரி 28 ஆந் திகதிய பீஎல் 118 ஆம் இலக்க திணைக்கள கட்டளைக்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாடு | சுங்க கட்டளைச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளின் கீழ் கிடைக்கின்ற பிரதிலாப முறைமையானது சுங்க வரலாற்றில் நீண்ட காலமாகவே அமுல்ப்படுத்தப்படுகின்றன. 1956 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சுங்க கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் மூலம் வெகுமதிகளைச் செலுத்தும் பொறிமுறை | அமைச்சரின் அங்கீகாரத்தினைக் காட்டும் நடைமுறை கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளாது 1999 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான 23 ஆண்டுகளில் வெகுமதி நிதியாக ரூபா 21,046,904,408 செலுத்தப்பட்டிருந்தது.

தொடர்பாக உறுதியாகக் காட்டப்பட்டுள்ளது. அதற்கிணங்க கிடைக்கின்ற தண்டப்பணம் அல்லது பெறுவனவுகளிலிருந்து அரைவாசியை திறைசேரியின் பிரதிச் செயலாளருக்கு செலுத்தப்படுவதுடன் மற்றைய அரைவாசி பொருட்களைக் கைப்பற்றிய உத்தியோகத்தர்களுக்கு அல்லது தகவல்களை வழங்கியவர்களுக்கு அந்த வகையிலேயே மேற்கூறிய இரண்டு தரப்பினர்களுக்கும் சேகரிக்கின்ற தரப்பினர்களால் (சுங்க பணிப்பாளர் நாயகம்) நிர்ணயிக்கப்படும் வகையில் செலுத்தப்படும். சுங்க திணைக்களத்தின் முன்னாள் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் டபிள்யூ.டி. அமரபாலா அவர்களை கொலை செய்த சம்பவத்தில் அந்த உத்தியோகத்தருக்கு இழப்பீடு செலுத்துவதற்கு முடியுமான வகையில் அப்போதைய கௌரவ நிதி அமைச்சரினால் சுங்க கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவிற்கு ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டு அத்தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டது. அதற்கிணங்க சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்தை தேற்றுவிப்பதற்காக 153(அ) (2) ஆம் பிரிவின் கீழ் ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. (பீ.வீரசேகர மற்றும் ரீ. கனனாதலிங்கம்

இலங்கையின் சுங்க சட்டம் அலகு 1 பக்க இலக்கம் 363 மற்றும் 364) புத்தகத்தின் இரண்டு எழுத்தாளர்களில் ஒருவரான சுங்க பணிப்பாளர் நாயகத்தினால் 1988 இன் 118 ஆம் இலக்க திணைக்கள கட்டளை வழங்கப்பட்டதுடன் 153 ஆம் பிரிவில் காட்டப்பட்டவாறு வெகுமதியை கொடுப்பனவு செய்யும் பிரேரணை வெளியிடப்பட்டது. இப்பிரேரணையானது கௌரவ நிதி அமைச்சரினால் கண்டிப்பாக அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த அங்கீகாரத்தை இன்றுவரை தேடிக் கண்டுபிடிக்க முடியாதுள்ளது. 153 A2 பிரிவின் கீழ் பிரமாணம் வெளிடப்பட்டிருந்ததனால் அந்த ஆண்டிலேயே திணைக்கள கட்டளை (DOPL) 118 இல் கொடுப்பனவு முறைமை அங்கீகரிக்கப்படாமைக்கு எந்தக் காரணமும் இருக்கவில்லை. குணதிலக எதிரி வீரசேன வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் மேல் முறையீட்டு நீதி மன்றம் தெரிவித்திருந்ததானது திணைக்களக் கட்டளை (DOPL) 118 என்பது செல்லுபடியானதைப் போல செயற்படுகின்ற ஒரு ஆவணமாகும்.

## 2.6 முற்பணங்கள் வழங்குதலும் தீர்த்துவைத்தலும்

இது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) எதிர்பார்க்கின்ற செலவுகள் மிகவும் சரியாக மதிப்பீடு செய்யப்படாமையின் காரணமாக 20 உத்தியோகத்தர்களுக்கு தேவையான அளவினை விட ரூபா 524,095 தொகையான மிகைப்பணம் முற்பணமாக வழங்கப்பட்டிருந்ததுடன் அது வழங்கப்பட்ட முற்பணத் தொகையில் 16 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | 20 உத்தியோகத்தர்களிடமிருந்து விடயங்களை விசாரித்து அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன் ஞாபகப்படுத்தல்களை அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்களை சரிசெய்வதற்கு அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டது.<br>முற்பணத்தில் 100% வரை சேமித்தல் இடம் பெற்றதானது கணனிகளைத் திருத்துதல், இலங்கை இராணுவப் படையின் பங்களிப்பில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டு அதற்கு தேவையான துணைக் கருவிகளைக் கொள்வனவு செய்வதற்காக முற்பணத்தினைப் பெற்றுக்கொள்ளும் போதாகும். கொவிட் தொற்று நோய் காரணமாக உரிய இராணுவ உத்தியோகத்தர்களுக்கு அந்த திருத்தம் செய்யும் நடவடிக்கைகளுக்காக இலங்கை சுங்கத்திற்கு வருவதற்கு முடியாதிருந்ததுடன் முற்பண பணமானது செலவு செய்யப்படாததுடன் 100% மும் மீண்டும் தீர்த்துவைக்கப்பட்டது. | எதிர்பார்த்த செலவுகளை சரியாக மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.7 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்

வங்கிக் கணக்கு செயற்பாடுகள் சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் கீழே தரப்படுகின்றன.

(அ) மக்கள் வங்கி கணக்கு இலக்கம் 001-1-001-2-9026644

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட கூற்றுக்களுக்கு இணங்க கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத செல்லுபடியாகும் காலம் 06 மாதங்களை மிகைத்த ரூபா 184,992.88 கூட்டுமொத்தமான காசோலைகள் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டதுடன் இக்காசோலைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நிதிப்பிரமாணம் 189 மற்றும் 486 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 75,507.70 கூட்டுமொத்தமான தேறப்படாத வைப்பு மீதிகள் காணப்பட்டன. | அவதானிப்புக்களுடன் இணங்குகிறேன். இதில் 2022-04-30 ஆந் திகதி வரை மிகுதியாகக் காணப்பட்டது ரூபா 100,000.00 தொகையான காசோலைகள் மாத்திரமாகும். அது சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. தேறப்படாத வைப்புக்களின் பெறுமதி ரூபா 4,799,344.70 ஆக சரி செய்யப்படுதல் வேண்டும். அப்பெறுமதியில் 2022-04-30 ஆந் திகதி வரை மிகுதியாக காணப்பட்ட காசோலைகளின் பெறுமதி ரூபா 5,507.70 ஆகும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இனங்காணப்பட்டாத பெறுவனவுகள் மற்றும் இனங்காணப்படாத கொடுப்பனவுகளின் மீதியாக முறையே ரூபா 8,905,234.65 மற்றும் ரூபா 153,245.37 வங்கிக் கணக்கிணக்க கூற்றில் காட்டப்பட்டிருந்ததுடன் அந்த மீதிகள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டதா என்பதனை உறுதிப்படுத்தும் சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகிறேன். 2012-12-31 இல் உள்ளவாறு இனங்காணமுடியாத பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 8,904,234.65 ஆக சரி செய்யப்படுதல் வேண்டும். இதில் 2022-04-30 ஆந் திகதி நிதிப்பிரமாணம் 189 மற்றும் 486 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. 2021-12-31 இல் உள்ளவாறு இணங்காணமுடியாத கொடுப்பனவுகள் ரூபா 153,245.37 ஆகும். இதில் ரூபா 112,408.60 பணத்தை தீர்த்துவைப்பதற்கு 2022 மே | உரிய மீதிகளை இனங்கண்டு கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மாதம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மிகுதிக் கொடுப்பனவுகளையும் இனங்கண்டு தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

**(ஆ) இலங்கை வங்கிக் கணக்கு இலக்கம் 0007041606**

**..............................................................................................**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| **.......................................** | **...............................** | **.....................** |
| (i) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கிணக்க கூற்றுக்களின் பிரகாரம் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத செல்லுபடியான காலம் 06 மாதங்களை மிகைத்த ரூபா 562,704.29 தொகையான காசோலைகள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. கொடுப்பனவுகளுக்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022-02-01 ஆந் திகதி ரூபா 89,901.10 தொகை மற்றும் 2022-02-23 ஆந் திகதி ரூபா 111,364.96 தொகை பொது வைப்புக் கணக்கிற்குச் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மிகுதி காசோலைகள் சம்பந்தமாக நி.பி 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) 2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு 2018, 2019 மற்றும் 2020 ஆண்டுகளுக்காக ரூபா 121,963.30 மொத்த தொகையான தேறப்படாத வைப்புக்கள் காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. இது சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 189 மற்றும் 486 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நி.பி 189 மற்றும் 486 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக்கொண்டுள்ளேன். | -மேற்படி- |
| (iii) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இனங்காணப்படாத பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் மீதிகளாக | இந்த இனங்காணப்படாத பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பாக இனங்கண்டு அது சம்பந்தமாக | உரிய மீதிகளை இனங்கண்டு கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் வேண்டும். |

| | |
|---|---|
| முறையே ரூபா 1,237,439.12 மற்றும் ரூபா 6,961.20 கூட்டுமொத்த தொகைகள் வங்கி கணக்கிணக்க கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததுடன் அந்த மீதிகள் இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டதா என்பதனை உறுதிப்படுத்தும் சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 நட்டங்களும் சேதங்களும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) இலங்கை சுங்கத்தின் மத்திய கைதவிர்ப்பு பிரிவு மேற்கொண்ட சுங்க புலனாய்வுகளின் பின்னர் அழிப்பதற்கு சிபார்சு செய்யப்பட்டிருந்த மனிதர்களின் பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற இறக்குமதி செய்த பாம் ஒயில் 105,570 கிலோகிராம்கள் அழிக்கப்பட்டது என போலி ஆவணங்களை உள்ளடக்கி அவை களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை மற்றும் அவற்றில் ஒரு பகுதியை சந்தைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் சம்பந்தமான புலனாய்வின் போது மத்திய கைதவிர்ப்பு பிரிவின் உத்தியோகத்தர்கள் அப்பிரிவினை ஸ்தாபிக்கும் பிரதான குறிக்கோளினை மீறி நடவடிக்கை எடுத்திருந்தார்கள் என்பது அவதானிக்கப்பட்டது. சுங்க புலனாய்வினை மேற்கொள்வதனைப் போல அப்புலனாய்வுகள் மேற்கொண்ட பிரிவின் பொறுப்பில் இருந்த பொருட்களை அழித்தல் | கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு இணங்கிய வகையில் மத்திய கைதவிர்ப்பு பிரிவினால் சுங்க புலனாய்வினை மேற்கொள்ளல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க இப்பிரிவு ஸ்தாபிக்கப்பட்ட பிரதான குறிக்கோளான பறிமுதல் செய்யப்பட்ட அல்லது இறக்குமதியாளர்களால் கைவிடப்பட்ட பொருட்களை விற்பனை செய்தல்/ அழித்தல் தொடர்பான நடவடிக்கை மாத்திரம் தற்பொழுது இடம் பெறுகின்றது.<br>அவ்வாறே 2021-08-02 ஆந் திகதி இந்த கணக்காய்வு ஐயவினா தொடர்பாக அனுப்பிவைக்கப்பட்ட பதில் கடிதத்தின் பிரகாரம் உரிய புலனாய்வுக் கோவையில் இறுதி அறிக்கை சுங்க பணிப்பாளருக்கு தெரியப்படுத்த வேண்டியிருந்தும் அவ்வாறு | சுங்க கட்டளைச் சட்டம் மற்றும் திணைக்கள சுற்றறிக்கை ஒழுங்கு விதிகளுக்கு அமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அல்லது விற்பனை செய்தல் என்ற செயற்பாடுகளும் அப்பிரிவின் மூலமே மேற்கொள்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டிருந்தது என்பதுவும் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே மேற்கூறிய பிரிவினால் இறக்குமதியாளர்கள் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் புலனாய்வு சம்பந்தமான இறுதி அறிக்கை மத்திய கைதவிர்ப்பு பிரிவின் சுங்க பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லைல. உரிய பிரிவின் சுங்க அத்தியட்சகர் மற்றும் பிரதி சுங்க பணிப்பாளரால் இப்புலனாய்வின் இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. | செய்யப்படவில்லை என்பதனை கணக்காய்வுடன் இணங்கிக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது. பிரச்சினைக்குரிய சம்பவம் தொடர்பான சுங்க புலனாய்வு கோவை மத்திய புலனாய்வுப் பிரிவிற்கு மேலதிக புலனாய்வு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | பொது மக்கள் அழைப்பு உபகரணங்கள் பொருத்தப்பட்டு இறக்குமதி செய்திருந்த ரூபா 9 மில்லியனுக்கு அண்மித்த பெறுமதியைக் கொண்ட அதி செகுசு TOYOTA LAND Cruiser வகையான ஒரு வாகனம் விசேட செயற்பாட்டு வாகனத் தொகுதியின் கீழ் ரூபா 1.5 மில்லியன் வரியினை மாத்திரம் அறவிட்டு விடுவிப்பதற்கு இலங்கை சுங்கத்தின் NC குழு நடவடிக்கை எடுத்திருந்தது. இந்த வகையான வாகனம் பயணிகள் போக்குவரத்து தொகுதியின் கீழ் விடுவிக்கப்பட்டிருக்குமாயிருந்தால் ரூபா 56 மில்லியனுக்கு அண்மித்த வரியினை அறவிட வேண்டி இருந்தது. அதன் காரணமாக அரசாங்கத்தினால் ரூபா 54,642,528 தொகையான வரி வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | இலங்கை சுங்கத்தின் NC குழு (Nomenclature & Classification Committee) விற்கு அனுப்பிவைக்கப்பட்டது. அக்குழுவினால் மேற்கூறிய வாகனத்திற்கான சரியான பொருட்கள் இணைக்கப்பட்ட வகைப்படுத்தல் இலக்கமாக 87059091 என்பதாக முடிவு செய்யப்பட்டது. அந்த தீர்மானத்தின் அடிப்படையில் இந்த வாகனம் இறக்குமதியாளருக்கு விடுவிக்கப்பட்டது எனவே NC குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் சுங்க வரி செலுத்தப்பட்டுள்ளதனால் வரி வருமானம் இழக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிட வேண்டிய நிர்ணயிக்கப்பட்ட வருமானத்தை அறவிட்டு சுங்கத்தின் வரியை விதிக்கும் போது சுங்க இணைந்த வகைப்படுத்தலினை பிழையான வகையில் பயன்படுத்துதல் 2011 ஆம் ஆண்டிலிருந்து இடம் பெறுகின்றது என சுட்டிக்காட்டப்பட்டிருந்தும் அதற்கு இணங்க மற்றவகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளததனால் முறைப்படியான ஒத்த தன்மையான தீர்மானத்தினை வழங்கி அரசாங்க வருமானத்தினை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2016 ஆம் ஆண்டின் போது ரெபிஸ்கேன் முறைமையை ஒரே தடவையில் கொள்வனவு செய்யாது 2021 ஆம் ஆண்டின் போது அதனை ஒரே தடவையில் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்ததனால் இலங்கை சுங்கத்திற்கு 2,380,093,392 (அமெரிக்க டொலர் 7,656,979) தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | நட்டத்திற்கான காரணத்தை வெளிப்படுத்தி பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஈ) | சுங்க புலனாய்வினை முடிவுறுத்தி வாகனங்களையும் கொள்கலன்களையும் விடுவிக்கும் வரை நிறுத்தி வைக்கப்படுகின்ற SALT நிறுவனத்திற்குச் சொந்தமான தரிப்பிடமானது குத்தகை அடிப்படையில் 2015 ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதியிலிருந்து பயன்படுத்தப்பட்டு வருவதுடன் அதற்கிணங்க இந்த தரிப்பிடம் இலங்கை சுங்கத்தின் பயன்பாட்டிற்காகவே பயன்படுத்தப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. எனினும் SALT தரிப்பிடத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள லக்சிரி சேவை கம்பனியின் கொள்கலன்களுக்கான வாடகை கட்டணம் இலங்கை சுங்கத்திற்கு கிடைக்க வேண்டிய போதிலும் அது SALT நிறுவனத்தினால் இக்கட்டணம் அறவிடப்பட்டிருந்ததனால் சுங்கத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 1,112,500 பணம் இழக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | -மேற்படி- |
| (உ) | நிறுவனத்தினால் ஒரு வெளிநாட்டு நிறுவனத்திற்காக தெடுக்கப்பட்ட ஒரு வழக்கிற்கு அதன் தீர்ப்பின் பிரகாரம் வெளிநாட்டு நிறுவனத்திற்கு ரூபா 101,183,021 தொகையை செலுத்துமாறு தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. மேலும் செலுத்தப்பட்ட இழப்பீட்டு பணமான ரூபா 37,529,750 | கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் 37814/MR ஆம் இலக்க வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் M/S Fairmacs Shipstores Private Limited நிறுவனத்திற்கு செலுத்த வேண்டி இருந்த இழப்பீட்டுப் பணமான ரூபா 372,950 தொகை இலங்கை சுங்கத்தின் வருடாந்த | வருடாந்த பாதீட்டினை தயாரிக்கும் போது தேவைப்பாட்டினை மிகைத்து நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்வதனை குறைத்துக் கொள்வதற்கு |

| | | |
|---|---|---|
| தொகை ஒரு நட்டமாக காட்டப்பட்டிருந்ததுடன் இப்பணத்தை முகாமைத்துவ இழப்பீட்டு நிதியிலிருந்து செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது மதிப்பீட்டு நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தி செலுத்தப்பட்டிருந்தது. | பாதீட்டு நிதி ஏற்பாட்டின் மூலம் செலுத்துவதற்காக திறைசேரி செயலகத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது என 2022-01-06 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் தெரிவிக்கப்பட்டது. (பின்ணிணைப்பு- 02) அதற்கிணங்க அந்த இழப்பீட்டு பணம் இலங்கை சுங்கத்தின் வருடாந்த பாதீட்டு நிதி ஏற்பாட்டின் மூலம் செலுத்தப்பட்டது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ பலவீனங்கள்

..........................................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிழக்கு மாகாண நீர் அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ஜப்பான் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருந்த உதவியின் அடிப்படையில் இலங்கை அரசாங்கத்தின் பொதுத் திறைசேரியினால் அச்செயற்திட்டத்திற்கு தேவையான D1 குழாய்கள் மற்றும் துணைக் கருவிகளை பெற்றுக்கொள்ளும் செயற்பாடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் அதற்குத் தேவையான D1 குழாய் களையும் துணைக்கருவிகளையும் பெற்றுக்கொள்வதற்காக ஒரு தனியார் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. அதற்காக செலவு செய்யப்படும் அமெரிக்க டொலர் 6,659,685 பணம் JICA நிறுவனத்திலிருந்து கிடைக்கும் உதவியிலிருந்தும் போக்குவரத்து செலவுகளும் வரிப்பணமும் இலங்கை அரசாங்கத்தினாலும் செலவு செய்யப்படும். இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் .......................................... | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் ................................ | சிபாரிசுகள் ..................... |
|---|---|---|
| (i) சுங்க கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவின் பிரகாரம் முதலாவது சந்தர்ப்பத்தில் வரி செலுத்தாத பொருட்களை பண்டகசாலையில் வைப்பதற்காக இலங்கை சுங்கத்தினால் ஒரு தனியார் நிறுவனத்திற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 08 குறிப்பிதழ்கள் (Cusdec) வழங்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க அமெரிக்க டொலர் 5,139,621 தொகையான பொருட்கள் பணடகசாலையில் (To Bond) வைக்கப்பட்டிருந்தன. | தொடக்க புலனாய்வு இடம் பெற்று வருகின்றது. தொடக்க புலனாய்வின் சிபாரிசின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | சுங்க கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் மிகையாக பெற்றுக்கொள்ளப்பட்ட தொகையை அறவீடு செய்வதற்கு மற்றும் போலியான ஆவணங்களை தயாரித்தமைக்கு எதிராக உரிய நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | சுங்க கட்டளைச் சட்டத்தின் 86 ஆம் பிரிவின் பிரகாரம் பொருட்களை பண்டகசாலையிலிருந்து விடுவிக்கும் போது ஏற்கனவே வெளியிடப்பட்ட பெருள் இருப்பின் இன்வொயிஸ் பெறுமதியையே வெளியிடுதல் வேண்டும். எனினும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இன்வெயிசினைப் பயன்படுத்தி உரிய பெறுமதியை அமெரிக்க டொலர் 6,350,364 ஆக போலியான தகவல்களுடன் இறக்குமதி குறிப்பிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அதன் மூலம் அமெரிக்க டொலர் 1,210,743 பெறுமதியினை உரிய நிறுவனத்தினால் மிகையாக பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. | | எடுத்தல் வேண்டும். |
| (ii) | பண்டசாலைக்கு பொருட்களை பொறுப்பேற்கும் போது செலுத்த வேண்டியிருந்த வரிக் கணிப்பு ரூபா 263,301,203 ஆக இருந்த போதிலும் பண்டகசாலையிலிருந்து பொருட்களை விடுவிக்கும் போது வரிக் கணிப்பு ரூபா 325,800,859 ஆக காட்டப்பட்டிருந்ததனால் இலங்கை அரசாங்கத்திற்கு ரூபா 62,499,656 வரிப் பணத்தை மிகையாக செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | சுங்க கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவீடு செய்வதற்கும் முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | போலியான இன்வொயிசிசினை தயாரித்தல், போலியான தகவல்களைச் சமர்ப்பித்து வெளிநாட்டினைப் போல உள்நாட்டிலும் பணத்தை பெற்றுக்கொண்டிருந்தும் இது சம்பந்தமாக புலனாய்வினை மேற்கொண்ட இலங்கை சுங்கத்தினால் உரிய நிறுவனம் பிழை செய்திருக்கவில்லை எனக் கருதி புலனாய்வினை முடிவுறுத்தியிருந்ததுடன் அவ்வாறு புலனாய்வு தீர்ப்பினை பிழையாக வழங்கிய உத்தியோகத்தர் சம்பந்தமாக நடவடிக்கையும் எடுக்காமை கணக்காய்வில் பிரச்சினைக்குரிய ஒரு விடயமாகும். | பதில் வழங்கப்படவில்லை. | சுங்க கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் புலனாய்வுத் தீர்ப்பினை பிழையாக வழங்கிய தரப்பினர்கள் சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(ஆ) பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்தல்
.........................................................................................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ....................................... | ................................. | ...................... |
| ஒரு கிலோ கிராம் ரூபா 10,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்ட எனசால் இருப்பினை ஒரு கிலோகிராம் ரூபா 1,000 வீதம் இலங்கை ஆயுர்வேத கூட்டுத்தாபனத்திற்கு வழங்குவதற்கு இணங்கிக் கொள்ளப்பட்டிருந்தும் அதனை பெற்றுக்கொள்வதற்கு மறுத்ததினால் ஏனைய விற்பனை முறைகளை பயன்படுத்தாதும் அந்துப் பூச்சிகளுடனான எனசால் இருப்பினை கைதவிர்ப்புச் செய்யாது வரையறுத்த இலங்கை சதோசவிற்கு விற்பனை செய்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருந்ததுடன் அது பாவனையாளர் உரிமையை மீறுதல் என அவதானிக்கப்பட்டது. | 575.5 கிலோ கிராம் நிறையுள்ள எனசால் இருப்பு 2020-08-17 ஆந் திகதிய 21/89/4 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் பிரகாரம் 2021 ஏப்ரல் 09 ஆந் திகதிபறிமுதல் செய்யப்பட்டது. இதற்காக பயிர் தனிமைப்படுத்தல் அங்கீகாரம் கிடைத்திருந்தது. எனினும் உற்பத்தி செய்த நாட்டின் சான்றிதழ் (Country of Origin) கிடைத்திருக்கவில்லை. இலங்கை குடியரசின் அமைச்சரவையினால் எடுக்கப்படுகின்ற தீர்ப்பின் பிரகாரம் விரைவாக பழுதடைகின்ற மற்றும் பாவனைக்கு பொருத்தமான பொருட்களை அரசாங்க நிறுவனங்களின் மூலம் கேள்வி கோரப்படாது கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்திற்கு மாத்திரம் வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க சுங்க கட்டளைச் சட்டத்தின் 105(4) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது. | பாவனையாளர் உரிமையை மீறாத வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(இ) மத்திய தபால் பரிமாற்றலில் சுங்க அலுவலகத்தின் காப்பகம்
.........................................................................................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ....................................... | ................................. | ...................... |
| (i) காப்பக பதிவேடுகளின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டிலிருந்து | SR Register இற்கு இணங்க | பழைய பொருட்கள் |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வுத் திகதியான 2021 திசெம்பர் 01 ஆந் திகதி வரையான காலத்தில் விடுவிக்கப்படாது காப்பகத்திலுள்ள 181 விடயங்களுக்கு மத்தியில் பழைய பார்சல்களை இனங்கண்டு அவற்றினை அழித்தல் விற்பனை செய்தல் அல்லது மேலதிக தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019-03-27 ஆந் திகதி சுங்க காப்பகத்தில் காணப்பட்ட அனைத்து பொருட்களையும் 71 மூடைகளில் பொதிசெய்து சேவை வழங்கல் பிரிவின் RTF களஞ்சியத்திற்கு மாற்றப்பட்டது என அப்போதைய தபால் மதிப்பீட்டு பிரிவின் சுங்க அத்தியட்சகரினால் சான்றுபடுத்தப்பட்டதுடன் அது பற்றி சேவை வழங்கல் பிரிவின் விடயத்திற்குப் பொறுப்பான அரசாங்க முகாமைத்துவ சேவை உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்டது. SR Register பிரிவில் அது பற்றி உறுதிப்படுத்தும் கடிதம் இணைக்கப்பட்டுள்ளது. மிகுதியாக உள்ள பழைய பார்சல்களை அழிப்பதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சம்பந்தமாக இனங்காணலை மேற்கொண்டு எதிர்காலத்தில் விரைவாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | முறையான படிவத்துக்கு இணங்க விபரமான தகவல்களை உள்ளடக்கும் வகையில் காப்பக பதிவேடு (SP Register) பேணப்பட்டிருக்கவில்லை. | 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட SR Register தொடர்ச்சியாக பேணப்பட்டிருந்ததுடன் 2022 சனவரி மாதத்திலிருந்து பொது 21 குறிப்பு புத்தகமானது SR Register ஒன்றாகப் பேணுவதற்கு ஆரம்பிக்கப்பட்டது. (முறைப்படியான விபரங்களுடன்) | நிதிபிரமாணம் மற்றும் உள்ளக சுற்றறிக்கைகளின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் முறைப்படியாக காப்பக பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |
| (iii) | முறையற்ற வகையில் பேணப்படுகின்ற காப்பக பதிவேடு (SR Register) முறைப்படியாக பேணப்படாமையால் பௌதீக பரிசோதனை மேற்கொள்ளக் கூடிய வகையில் காப்பகத்திலுள்ள பொருட்களை இனங்காண்பதற்கு முடியாத வகையில் பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. | காப்பகத்தில் மட்டுப்படுத்தப்பட்ட இட அளவு காணப்படுவதனால் காப்பகத்திற்குள் நுழைவதற்கு ஏனைய பார்சல்களை நெருங்குவதற்கும் சிக்கலாக உள்ளது. மத்திய கைதவிர்ப்பு பிரிவினூடாக கைதவிர்ப்பதற்குரிய நடவடிக்கைகள் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் காப்பகத்தில் பொருட்களை இனங்காண கூடிய வகையில் களஞ்சியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தன. எதிர்காலத்தில் உரிய பொருள் வகைக்கு இணங்க, கால அட்டவணையின் பிரகாரம் இனங்காண்பதற்கு வசதியான வகையில் பொதி செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| (iv) | காப்பகத்தில் காணபட்படுகின்ற பொருட்களில் 2018 ஆம் ஆண்டிலிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களை உள்ளடக்கி பொறுப்பினை ஒப்படைப்பது தொடர்பாக 2021 யூலை 19 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட காப்பகத்தின் பதிவேட்டிற்கு இணங்க காப்பகத்தில் காணப்பட்ட 97 பொருள் விடயங்களில் 02 ஆண்டுகளை மிகைத்து காப்பகத்திலுள்ள 19 விடயங்கள் தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படாது நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | கைதவிர்ப்புச் செய்யக்கூடிய பொருட்களை இனங்காண்பதற்கும் அவற்றினை முறைப்படியாக கைதவிர்ப்புச் செய்வதற்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | பழைய பொருட்கள் சம்பந்தமாக இணங் காணலை மேற்கொண்டு எதிர்காலத்தில் விரைவாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(ஈ) மத்திய தபால் பரிமாற்று சுங்க அலுவலகம்
..................................................................

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| | ..................................... | .............................. | ..................... |
| (i) | வெளிநாட்டிலிருந்து மத்திய தபால் பரிவர்த்தனையினூடாக கிடைக்கின்ற பொருட்கள் பொதிகளாக கிடைக்கின்றமை இடம் பெறுவதுடன் அந்த பொதிகளில் அடங்கியுள்ள பொருள் வகை அல்லது விடயத்தை இனங்காண்பதற்கான ஸ்கேன் இயந்திரத்திற்கு தொடர்புபடுத்தப்பட்டும் சந்தேகமான அல்லது சட்ட விரோதமான பொருட்களை தெளிவாக இனங்காண்பதற்கு இயலுமை இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. உத்தியோகத்தர்களின் அனுபவம் மற்றும் தனிப்பட்ட தற்றுணிபின் | வெளிநாட்டிலிருந்து கிடைக்கின்ற பொருட்களை மத்திய தபால் பரிமாற்றிற்கு அனுப்பிவைக்கும் போது பொருட்கள் அடங்கியுள்ள பொதிகள் தொடர்பான விபரம் மாத்திரம் தபால் அலுவலக உத்தியோகத்தர்களுக்கு கிடைக்கும். இப்பொதிகளின் உள்ளடக்கம் தொடர்பான விபரம் கிடைப்பது உரிய ஒவ்வொரு பொதியையும் திறந்ததன் பின்னர் அப்பொதியினுள் அடங்குகின்ற ஆவணத்தில் உள்ள தகவல்களின் | தபால் திணைக்களத்துடன் விரைவாக கலந்துரையாடி இச்செயற்பாட்டிற்காக பொருத்தமான நடைமுறையை பின்பற்றுதல் வேண்டும். |

பேரில் நிறுத்திவைக்கப்பட்ட பொருட்கள் தொடர்பாக ஒரு முடிவுக்கு வருதல் இடம்பெற்றிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

பிரகாரமாகும். அதன் போதும் பொருள் வகை அல்லது விடயங்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய விபரமான ஒரு அறிக்கை தபால் அலுவலக உத்தியோகத்தர்களுக்கும் கிடைப்பதில்லை. தபால் உத்தியோகத்தர்களுக்கும் கிடைப்பது கடிதம் மற்றும் பார்சல் அடங்கியுள்ள பொதி தொடர்பான விபரம் மாத்திரமானதுடன் அதில் உள்ளடங்கியுள்ள கடிதம் மற்றும் பார்சல்கள் தொடர்பான தகவல்கள் இதனுடன் கிடைப்பதில்லை. இப்பொதி தொடர்பான விபரத்தை சுங்கத்திற்கு வழங்குமாறு தபால் திணைக்களம் தெரியப்படுத்தியுள்ளது. உரிய பொதியை திறந்ததன் பின்னர் அந்த ஒவ்வொரு பொதியிலும் அடங்கியுள்ள கடிதம் மற்றும் பார்சலின் எண்ணிக்கை, அவற்றின் நிறை, கரைபட்டி இலக்கம் என்பன தொடர்பான தகவல்கள் அடங்கிய அறிக்கை ஒவ்வொரு பொதியினுள்ளும் காணப்படுவதுடன் அதனையும் சுங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்குதல் இன்றுவரை இடம்பெற்றிருக்கவில்லை. எதிர்காலத்தில் இது தொடர்பாக சுங்கத்திற்கு தெரியப்படுத்துமாறு தபால் திணைக்களத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக உத்தியோகத்தர்களின் அனுபவம் மற்றும் தனிப்பட்ட தற்றுணிபின் பேரில் ஸ்கேன் இயந்திரத்தில் பரீட்சிக்கும் போது சந்தேகமான பொருட்களை நிறுத்திவைத்தல்

| | | | |
|---|---|---|---|
| | | தொடர்பான முடிவுக்கு வருதல் இடம் பெறுகின்றது. | |
| (ii) | வெளிநாட்டிலிருந்து உள்நாட்டிற்கு கிடைக்கின்ற தபால் பார்சல்கள் மீது விதிக்கப்படுகின்ற சுங்க கட்டணங்களை அறவீடு செய்வதற்காக 119 ஆம் இலக்க படிவத்திலான பற்றுச்சீட்டு புத்தகங்கள் முறையான பாதுகாப்புடன் பொறுப்புக் கூறக்கூடிய உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் தேவையான அளவிலான உள்ளகக் கட்டுப்பாடு அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 119 ஆம் இலக்க படிவத்திலான புத்தகம் சுங்க பரீட்சகர்களின் பொறுப்பில் காணப்படுகின்றது. இப்புத்தகம் தலைமை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்படுவதுடன் அதற்காக நிறைவேற்று தரத்திலுள்ள உத்தியோகத்தர்களின் கையொப்பத்துடன் வேண்டுதல் கடிதம் அனுப்பிவைக்கப்படும். புத்தகங்கள் கணிப்பீடு செய்து பெற்றுக்கொள்ளப்பட்டு பதிவேட்டில் உள்ளடக்கப்படும். புத்தகங்கள் காலி, கண்டி, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய உபதபால் அலுவலகங்களுக்கு அனுப்பும் போதும் கவுன்டர்களுக்கு வழங்கும் போதும் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் கையொப்பமிட்டு ஒப்படைத்தலும் கையொப்பமிட்டு பொறுப்பேற்றலும் இடம்பெறுகின்றது. எதிர்காலத்தில் உயர் மட்ட உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் அதனை மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் சம்பந்தமாக போதியளவான உள்ளகக் கட்டுப்பாட்டினை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(உ) இலங்கை சுங்கத்திற்காக கொள்கலன்களை ஸ்கேன் செய்யும் முறைமையை கொள்வனவு செய்தல்**

**..............................................................................................................**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| **...................................** | **..............................** | **..................** |
| (i) 2016 ஆம் ஆண்டின் போது | நிதி அமைச்சின் | வெளிநாட்டு |

| | | |
|---|---|---|
| BOO முறைமையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ஸ்கேன் செய்தல் முறைமைக்காக 2020 மே மாதத்திலிருந்து 2021 சனவரி மாதம் வரை செலுத்த வேண்டியிருந்த ஸ்கேன் கட்டணம் அமெரிக்க டொலர் 3,036,000 இதற்காக 2021 ஆம் ஆண்டின் போது ஸ்கேன் செய்தல் முறைமையை- கொள்வனவு செய்யும் போது அமெ. டொலர் 1,500,000 பணம் ஒரே தடவை கொள்வனவு செய்யும் கிரயத்திற்கு உள்ளடக்கப்பட்டிருந்தது. வெளிநாட்டு நாணய மாற்று சிக்கலை கருத்தில் கொள்ளாது அமெரிக்க டொலர் 21,590,008 தொகையை 180 நாட்களில் செலுத்தி பூர்த்தி செய்து ஸ்கேன் இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு எடுத்த தீர்மானம் கணக்காய்வில் பிரச்சினைக்குரிய விடயமாகும். | 21/1147/304/098 ஆம் இலக்க 2021-06-23 ஆந் திகதிய ‘‘சுங்க செயற்பாடுகளுக்கான ரெபிஸ் ஸ்கேன் சிஸ்டம், பிரைவேட் லிமிட்டட்டினால் ஸ்தாபிக்கப்பட்ட கொள்கலன் ஸ்கேன் முறைமையினை முழுமையாக கொள்வனவு செய்வதற்கான அங்கீகாரம்’’ எனும் தலைப்பினைக் கொண்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக அமைச்சரவை அங்கீகாரமானது 2021 யூலை மாதம் 06 ஆந் திகதி அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதற்கிணங்க சுங்க செயற்பாடுகளுக்காக ரெபிஸ் ஸ்கேன் சிஸ்டம் பிரைவேட் லிமிட்டட்டினால் ஸ்தாபிக்கப்பட்ட கொள்கலன் ஸ்கேன் முறைமையை முழுமையாகக் கொள்வனவு செய்வதற்கும் 2020 மே மாதத்திலிருந்து 2021 சனவரி வரை கொள்கலன்களை ஸ்கேன் செய்யும் கட்டணமாக அமெரிக்க டொலர் 1,500,000 பணத்தை செலுத்துவதற்கும் அதன் மூலம் அங்கீகாரம் கிடைத்திருந்தது. அக்கொடுப்பனவுகள் பின்வருமாறு 03 தவணைகளில் மேற்கொள்ளப்பட்டது.<br>2021-07-19- முதலாவது தவணைப் பணம்<br>2021-09-17- இரண்டாவது தவணைப் பணம்<br>2021-12-22- மூன்றாவது தவணைப் பணம் | நாணய சிக்கல் காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் போது அது பற்றி கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2021 சனவரியிலிருந்து 2021 செப்தெம்பர் வரை நாளாந்தம் ஸ்கேன் செய்த சராசரி கொள்கலன்களின் எண்ணிக்கை 238 ஆக இருந்ததுடன் அதற்கிணங்க ஒரு நாளைக்கு (1100-238) 862 கொள்கலன்களுக்காக அமெரிக்க டொலர் 8620 தொகையான விளைவற்ற செலவினை மேற்கொள்ள வேண்டியிருந்தது.<br>அதற்கிணங்க மேற்கூறிய காலத்திற்கு அமெரிக்க டொலர் 2,353,260 தொகையினை மேலதிகமாக செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | 2016 ஒக்தோபர் 28 ஆந் திகதி நிதி அமைச்சு, இலங்கை சுங்கம், ரெபிஸ்கேன் சிஸ்டம் பிரைவேட் லிமிடட் என்பவற்றிற்கிடையே மேற்கொள்ளப்பட்ட முத்தரப்பு உடன்படிக்கையின் பிரகாரம் ஒரு நாளுக்கு 1,100 கொள்கலன்களை ஸ்கேன் செய்வதற்கும் ஒரு கொள்கலனுக்கு அமெரிக்க டொலர் 10 தொகையும் அதற்கு மேலதிகமாக ஸ்கேன் செய்கின்ற ஒவ்வொரு கொள்கலனுக்குமாக அமெரிக்க டொலர் 5 தொகையும் செலுத்துவதற்கு இணங்கி கொள்ளப்பட்டது. எனினும் 2020 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதத்திலிருந்து நாடு முழுவதும் பரவியிருந்த கொவிட் தொற்று நோயின் காரணமாக இலக்கிடப்பட்ட கொள்கலன்களின் அளவு ஸ்கேன் செய்வதற்காக வந்திருக்கவில்லை என அவதானிக்கிறேன். | செலவுகளை குறைத்துக் கொள்வதற்காக விளைவற்ற செலவுகளை மேற்கொள்ளாதிருக்க தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தும் உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு முன்னர் இயந்திரங்களின் செயற்படும் தன்மையை பரீட்சித்துப் பார்ப்பதற்காக 5 சுங்க உத்தியோகத்தர்களுக்கு ஐக்கிய குடியரசு அரசாங்கத்தின் தொழிற்சாலைக்கு அவதானிப்பு சுற்றுப் பயணத்திற்கு ரெபிஸ்கேன் கம்பனியின் அனுசரணை வழங்கப்பட்டிருந்ததன் மூலம் பெறுகை நடைமுறைக்கு தொடர்புபட்ட உத்தியோகத்தர்களால் முறையற்ற தாக்கத்தினை | நிதி அமைச்சு, இலங்கை சுங்கம், ரெபிஸ்கேன் சிஸ்டம் பிரைவேட் லிமிட்டட் என்பவற்றிற்கிடையே 2016-10-28 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட முத்தரப்பு உடன்படிக்கையில் தொழிற்சாலை அவதானிப்பு சுற்றுப்பயணம் சம்பந்தமாக குறிப்பிடப்பட்டுள்ளது என அவதானிக்கிறேன்.<br>அதற்கிணங்க சுங்க பணிப்பாளர் நாயகத்தினை உள்ளடக்கி பெறுகை நடைமுறையுடன் சம்பந்தப்பட்ட 05 உத்தியோகத்தர்கள் சுற்றாடல் துறைப் பயணத்திற்காக (Fectory | கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் போது வெளிப்படைத் தன்மை உருவாகும் வகையில் இடம்பெறுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு உள்ளது என்ற சந்தேகத்தினை கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதுள்ளது. | Acceptation Test) ஐக்கிய குடியரசிற்கு சென்றிருந்தார்கள் என அவதானிக்கப்பட்டது. | |
| (iv) | இந்த ஸ்கேன் இயந்திரமானது ஐக்கிய குடியரசிலிருந்து 2019 பெப்ரவரி 13 ஆந் திகதி நாட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் 2019 சனவரி 22 ஆந் திகதி இயந்திரப் பயன்பாட்டிற்கு பொருத்தமானது என அதாவது ஆபத்தான தன்மையற்றது என இலங்கை அணுசக்தி அதிகார சபையினால் இயந்திரம் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் பரீட்சித்துப் பார்க்காது சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. | இணங்குகிறேன்.<br>2018 ஆம் ஆண்டில் ஒழுங்குபடுத்தப்பட்ட சுற்றாடல் துறைசார்ந்த பயணத்திற்கு (Fectory Acceptation Test) இலங்கை அணுசக்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஒரு அங்கத்தவராக பங்குபற்றியிருந்தார் என அவதானிக்கிறேன்.<br>இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்துதல் சபை மேற்கூறிய கடிதத்தை அனுப்பியிருந்தது 2019 சனவரி மாதம் 22 ஆந் திகதியாகும். அக்கடிதத்தில் கீழே குறிப்பிட்ட நிபந்தனையையும் ஆங்கில மொழியில் உள்ளடக்கப்பட்டிருந்தது.<br>1. You are hereby authorized to install the above 04 nos of container scanning X-ray systems at Colombo Port only after adhering the rediation protection requirements given in the council letter No. AERC/03/D2/01 dated 01-02-2018<br>2. After the machines are installed the council should be informed for licencing process along with the duly filled notification & application before the are used for scanning. | -மேற்படி- |
| (v) | ரெபிஸ்கேன் கொள்கலன் ஸ்கேன் செய்தல் இயந்திரம் | ரெபிஸ் கேன் இயந்திர முறைமையை | செலவு செய்யும் போது ஆழ்ந்த |

| | | | |
|---|---|---|---|
| | ஸ்தாபிக்கப்பட்டுள்ள முறைமையின் பிரகாரம் பிரைம் மூவர் இயந்திரம் வசதியாக அசையக்கூடிய கையில் (Fectory Layout) நடைமுறைச் சாத்தியமாகவும் சிக்கனமாகவும் தயாரிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | ஸ்தாபிப்பதற்கு துறைமுக அதிகார சபையின் மூலம் வழங்கிய காணியின் வடிவமைப்பின் அடிப்படையில் பிரைம் மூவர் இயந்திரம் சிக்கலின்றி அசையக் கூடிய வகையில் Fectory outlet தயாரிக்கப்பட்டுள்ளது. | அறிவோடு நடைமுறைச் சாத்தியமாக மற்றும் சிக்கனமாக நலனளிக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vi) | அமைச்சரவை அங்கீகாரத்தின் மூலம் 100 சதவீதம் கொள்கலன்களை ஸ்கேன் செய்தல் எதிர்பார்க்கப்பட்டிருந்ததனால் ஸ்கேன் செய்தல் முறைமையினை கொள்வனவு செய்தல் மிகவும் நலன்தரக்கூடியதாக இருந்த போதிலும் கேள்வி மேன்முறையீட்டு குழுவினால் மீண்டும் கேள்விதாரர்களை மதிப்பீடு செய்வதற்கு வழங்கிய சிபாரிசும் அமுல்ப்படுத்தப்படாது அதிக செலவினை மேற்கொண்டு ஸ்கேன் செய்தல் முறைமையானது Build own & Operate முறைமையின் அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானித்தலானது இலங்கை சுங்கத்தின் தேவைப்பாட்டின் அடிப்படையில் இடம்பெற்றதா என்பது கணக்காய்வில் ஒரு சச்சரவுத் தன்மையான விடயமாகும். | இணங்குகிறேன். | -மேற்படி- |
| (vii) | Boo முறைமையின் கீழ் அரசாங்கத்திற்கு சாதகமற்ற உடன்படிக்கையின் 17.4 ஆம் பிரிவின் காரணமாக ரெபிஸ்கேன் கம்பனியிடமிருந்தே கொள்கலன்களை ஸ்கேன் செய்யும் இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததனால் ஸ்கேன் இயந்திரத்தை பயன்படுத்துவது தொடர்பாக | ஸ்தாபித்தல் உரிமை மற்றும் செயற்படுத்துதல் பெறுகை நடைமுறையின் கீழ் (BOO) தெரிவு செய்து ஸ்தாபிக்கப்பட்டுள்ள கொள்களன்களை ஸ்கேன் செய்தல் முறைமையினை 2021 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்வதற்கு நிதி அமைச்சினாலேயே தீர்மானிக்கப்பட்டது என | கொள்வனவு செய்தலினை மேற்கொள்ளும் போது பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீண்டும் சாத்திய வள ஆய்வினை மேற்கொள்வதற்கு இருந்த வாய்ப்பு இழக்கப்பட்டிருந்தது. புதிய பெறுகையின் மூலம் திறந்த சந்தைப் போட்டிக்கு இடமளித்து தொழில்நுட்ப மதிப்பீட்டினை மேற்கொண்டு ஆகக் குறைந்த கிரயத்தின் கீழ் ஸ்கேன் இயந்திரத்தினை கொள்வனவு செய்வதற்கு இருந்த வாய்ப்பும் இழக்கப்பட்டிருந்ததுடன் மாற்று வழியான இக்கொள்வனவானது கணக்காய்வின் போது ஒரு பிரச்சினைக்குரிய ஒரு விடயமாகும். | அவதானிக்கிறேன். | |
| (viii) | சுங்க விடுவிப்பு நடைமுறைக்காக முழுமையான ஒரு எக்ஸ்ரே ஸ்கேனர் எதிர்பார்க்கப்பட்டிருந்தும் அது நடைமுறைப்படுத்தப்படாமையால் வெளிப்படுத்தப்பட்ட பொருள் விடயங்களுக்கு மத்தியில் மறைக்கப்பட்டுள்ள விடயங்களை இனங்காணல், மோசடியாக பொருட்களை வெளிப்படுத்துதல், எண்ணிக்கையை குறைத்துக் காட்டல், தடைசெய்யப்பட்ட மற்றும் சட்ட விரோத பொருள் இறக்குமதியை குறைத்தல் ஆகிய எதிர்பார்க்கப்பட்ட திட்டத்தினை அடைந்து கொள்ள முடியாதிருந்ததுடன் 2019 நவம்பர் மாதத்திலிருந்து 2021 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை விடுவிக்கப்பட்ட மொத்த கொள்கலன்களுடன் ஒப்பிடுகையில் ஸ்கேன் செய்யப்பட்ட கொள்கலன்கள் 08 சதவீதமான அளவினைக் கொண்டிருந்தது. | தொடக்க கட்டத்தில் ரெபிஸ்கேன் முறைமையின் மூலம் இணைய வழிப்படுத்தப்பட்ட ஸ்கேன் செய்தலுக்கு தெரிவு செய்யப்பட்ட கொள்கலன்களின் எண்ணிக்கை குறைவாக இருந்த போதிலும் அது படிப்படியாக தற்பொழுது அதிகரித்துள்ளது. ரெபிஸ்கேன் செய்தலுக்கு கொள்கலன்களை தொடர்புபடுத்தலானது ஆபத்துக்களை முகாமைத்துவம் செய்யும் அடையாளம் காணப்பட்ட கொள்கலன்கள் எனவும் அவ்வாறு தொடர்புபடுத்தப்பட்ட அனைத்து கொல்கலன்களும் ஸ்கேன் செய்யப்பட்டுள்ளன எனவும் குறிப்பிடுகிறேன். | எதிர்பார்த்த திட்டங்களை அடைந்துகொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஊ)** **SALT வாகனங்கள் மற்றும் கொள்கலன்கள் தரிப்பிடத்தின் கணக்காய்வு பரிசோதனை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | புலனாய்வு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படாது நிறுத்திவைக்கப்பட்டுள்ள 336 வாகனங்களுக்காக 2021 திசெம்பர் 07 ஆந் திகதி வரை ரூபா 138,513,782 தொகை இலங்கை சுங்கத்தினால் SALT நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியிருந்ததுடன் வாகன புலனாய்வு நடவடிக்கையை முடிவுறுத்தும் செயல்முன்னேற்றத்தின் அடிப்படையில் செலுத்த வேண்டியிருந்த இப்பணம் எதிர்காலத்தில் இன்னும் அதிகரிக்க கூடியதாக இருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | உரிய புலனாய்வுகளை முறைப்படியாக விரைவாக முடிவுறுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | சுங்கத்திடம் கோவைகள் அல்லது அறிக்கைகள் இல்லாத 51 வாகனங்கள் கூரையினால் மறைக்கப்பட்டுள்ள மற்றும் அதற்கு வெளியே வாகன தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | பதில் வழங்கப்படவில்லை. | இது சம்பந்தமாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | கூரையினால் மறைக்கப்பட்ட பகுதியில் துருப்பிடித்துக் காணப்பட்ட அதிக அளவில் பழுதடைந்துள்ள 134 வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதனால் SALT நிறுவனத்திற்கு இலங்கை சுங்கத்தினால் மாதாந்தம் ரூபா 895,500 வீதம் செலுத்த வேண்டியிருந்தது. இன்னும் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளக்கூடிய இந்த வாகனங்களை கைதவிர்ப்புச் செய்யும் நடவடிக்கைகளினூடாக மாதாந்தம் செலுத்தப்படுகின்ற இப்பணத்தை சேமிக்கக்கூடியதாக காணப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (iv) | சவுத் ஏசியா லொஜிஸ்டிக் டேர்மினல் நிறுவனம் (SALT) மற்றும் இலங்கை சுங்கத்தினால் வாகன தரிப்பிடத்திற்காக குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள காணிக்காக இரண்டு தரப்பினராலும் 2016 சனவரி 05 ஆந் திகதி கையொப்பமிட்டுள்ள உடன்படிக்கையின் செல்லுபடி காலம் 2015 சனவரி 19 இலிருந்து 2020 சனவரி 18 வரை - 05 ஆண்டுகள் வரையாக இருந்ததனால் ஒரு ஆண்டிற்கு முன்னர் பிற்திகதியிடப்பட்டு (Back Date) உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்தது. | 2015-01-19 இலிருந்து 2020-01-18 வரை செல்லுபடியாகும் வகையில் குத்தகை உடன்படிக்கை 2016-01-05 ஆந் திகதி கையொப்பமிடப்பட்டிருந்த போதிலும் அத்தரிப்பிடம் சுங்கத்தினால் பயன்படுத்துவதற்காக 2016-05-13 ஆந் திகதியே பெறுப்பேற்கப்பட்டிருந்தது. மாதாந்த வாடகைப் பணம் செலுத்துதல் அத்திகதியிலிருந்தே மேற்கொள்ளப்பட்டது. | உரிய சட்ட விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | 2819 ஆம் இலக்க நில அளவைப்படத்தில் 01 ரூட் 16.46 பேர்ச்சஸ் காணிப் பகுதியை இலங்கை சுங்கத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு 2015 சனவரி 19 ஆந் திகதி சவுத் ஏசியா லொஜிஸ்டிக் டேர்மினல் கம்பனி 05 ஆண்டுகள் வரை உடன்படிக்கை செய்திருந்தும் 2015 பெப்ரவரி 20 ஆந் திகதியிலிருந்து 03 ஆண்டுகளுக்காக Unixpo Holding (Pvt) கம்பனியிடமிருந்து குத்தகை உரிமை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததனால் உடன்படிக்கை அமுல்ப்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் காணியின் சட்டரீதியான உரிமையானது சவுத் ஏசியா லொஜிஸ்டிக் டேர்மினல் கம்பனிக்கு உள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு சான்று இல்லை. | 2819 ஆம் இலக்க நில அளவைப்படத்தில் 01 ரூட் 16.46 பேர்ச்சஸ் காணித்துண்டு 2015-02-20 ஆந் திகதியிலிருந்து South Asia Logistics (Pvt.) Ltd நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஆனால் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட 2016-01-05 ஆந் திகதியளவில் அனைத்து தகமைகளும் அடைந்து கொள்ளப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெறும் போது சட்டரீதியான கடப்பாடுகள் உருவாகும் வகையில் அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (vi) | காணிப் பகுதிக்காக இலங்கை சுங்கம் மற்றும் சவுத் ஏசியா லொஜிஸ்டிக் டேர்மினல் | குத்தகை உடன்படிக்கையானது இலங்கை சுங்கம் மற்றும் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனம் ஆகிய இரு தரப்பினர்களுக்குமிடையே உருவாக்கி கொள்ளப்பட்டது இணக்கப்பாடு மாத்திரமானதுடன் அந்த இணக்கப்படானது காணிப்பதிவு அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்டிருக்காததனால் சட்டரீதியான குத்தகை உடன்படிக்கை உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | South Asia Logistics (Pvt.) Ltd நிறுவனம் ஆகிய இரு தரப்பினர்களுடன் உருவாக்கிக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையாகும் அந்த உடன்படிக்கையானது காணிப்பதிவகத்தில் பிரிவு செய்யப்பட்டிருக்காததனால் அதன் சட்டரீதியான தன்மையில் சிக்கல் உருவாகி இருக்கவில்லை. | |
| (vii) | உடன்படிக்கையின் பிரகாரம் சவுத் ஏசியா லொஜிஸ்டிக் டேர்மினல் நிறுவனத்தினால் கூரை மறைக்கப்பட்ட களஞ்சிய வளவு (Shelfered Warehouse) 2016 மே 13 ஆந் திகதி ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அது 20,000 சதுர அடிகளை உள்ளடக்கியிருந்த போதிலும் உள்ளபடியாக அதில் காணப்பட்டது 18,030 சதுர அடிகளாக இருந்ததனால் உடன்படிக்கைகளின் நிபந்தனையை சவுத் ஏசியா லொஜிஸ்டிக் டேர்மினல் நிறுவனம் நிறைவேற்றியிருக்கவில்லை. | இணங்குகிறேன். குத்தகை உடன்படிக்கையில் மாதாந்த குத்தகைப் பணம் ரூபா 995,000.00 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்தும் இத்தரிப்பிடத்திற்காக ஆரம்பத்திலிருந்தே கொடுப்பனவு செய்யப்பட்டதானது உள்ளபடியாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட காணி அளவான 18030 சதுர அடிக்காக ரூபா 895,500.00 மாத்திரமாகும். | உடன்படிக்கையை மீறியமை சம்பந்தமாக சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (viii) | இந்த உடன்படிக்கையின் காலமாகிய 5 ஆண்டுகள் முடிவடையும் திகதி 2020 சனவரி 18 ஆந் திகதியாக இருந்த போதிலும் அது முடிவடைகின்ற சந்தர்ப்பம் வரை மீண்டும் பெறுகை நடைமுறையினூடாக வாகனங்கள் மற்றும் கொள்கலன்கள் களஞ்சியப்படுத்துவதற்கு ஒரு தரிப்பிடத்தினை தெரிவு செய்யும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டிய போதிலும் சுங்கத்தினால் அது தொடர்பாக எதுவித நடவடிக்கையையும் எடுக்காது சவுத் ஏசியா லொஜிஸ்டிக் டேர்மினல் | தொடக்க சந்தர்ப்பத்தின் போது அதாவது 2020-01-19 ஆந் திகதியிலிருந்து 2020-07-18 ஆந் திகதி வரை 06 மாதங்களால் நீடிக்கப்பட்டிருந்தது. பின்னர் நாட்டில் நிலவிய Covid- 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக புதிய பெறுகை நடைமுறைக்காக பொருத்தமான சூழ் நிலை இல்லாததனால் 2020-07-19 ஆந் திகதியிலிருந்து 2021-07-18 ஆந் திகதி வரையும், 2021-07-19 | பெறுகை வழிகாட்டிக் கோவையின் சட்டத்துக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனத்துடன் உருவாக்கிக் கொள்ளப்பட்டிருந்த பழைய உடன்படிக்கையானது நான்கு தடவைகள் அடிக்கடி நாளதுவரையாக்கப்பட்டு குத்தகை வாடகை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | இலிருந்து 2021-10-18 வரையும் 2021-10-19 ஆந் திகதியிலிருந்து 2022-04-18 ஆந் திகதி வரையுமாக நீடிக்கப்பட்டது. எனினும் தற்பொழுது தேசிய கேள்வி கோரலின் கீழ் பத்திரிகை அறிவித்தல்கள் வெளியிடப்பட்டு புதிய பெறுகை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. | |
| (ix) | சுங்கத்தினால் விலைமனுக்கள் கோரி சமர்ப்பிக்கப்பட்ட தொழில்நுட்ப பொருள் விபரக் குறிப்பில் காட்டப்பட்டவாறு சவுத் ஏசியா லொஜிஸ்டிக் டேர்மினல் கம்பனியால் சுங்கம் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட வாகனத் தரிப்பிடம் முழுவதையும் உள்ளடக்கும் வகையில் CCTV கமரா முறைமை அமுல்ப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பம் வரை அதில் காணப்பட்ட கமரா முறையில் 04 குறைபாடுகள் காணப்பட்டன. | வழக்கமாக CCTV முறைமையில் அல்லது ஏனைய சிக்கல்கள் உருவாகிய உடன் அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற உத்தியோகத்தர்களால் உரிய நிறுவனத்திற்கு தெரியப்படுத்தி அக்குறைபாட்டினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உடன்படிக்கையில் குறிப்பிட்ட விடயங்களை தடைப்படாத வகையில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(எ) Clean Power Lanka (Pvt.)Ltd. (Wire cut EDM machine EDN Dailling Machine) Clean Power Lanka (Pvt.)Ltd எனும் பெயரிலான நிறுவனங்களால் 2021 ஏப்ரல் 30 ஆந் திகதி 165721 ஆம் இலக்க மதிப்பீட்டு குறிப்பின் கீழ் 02 மெசின்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்ததுடன் அது சம்பந்தமாக இடம்பெற்ற வரி மோசடிகள் தொடர்பாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட பொது மக்கள் முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விடயத்தை தேடிப்பார்த்தலின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| | ...................................... | ............................... | ..................... |
| (i) | பொது மக்கள் முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்ட இறக்குமதியாளருக்கு கப்பல் சரக்கு இலிகிதரினால் வழங்கிய Assessment Note ஆவணத்தை கணக்காய்விற்காக | பதில் வழங்கப்படவில்லை. | கப்பல் சரக்கு இலிகிதர்களுக்கு பொது மக்கள் முறைப்பாட்டினை அனுப்புவதற்கு முடியாத வகையில் போதியளவு உள்ளகக் |

| | | | |
|---|---|---|---|
| | சுங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டுக் குறிப்புடன் ஒப்பீடு செய்த போது அவதானிக்கப்பட்டதானது அச்சிடும் காலங்களுக்கிடையே ஒரு வித்தியாசம் காணப்பட்டது என்பதாகும். அறவிடப்பட்ட வரிப் பெறுமதிக்கிடையே ரூபா 197,452 மொத்த தொகையான வித்தியாசமும் காணப்பட்டது. | | கட்டுப்பாட்டு நடைமுறையும் பின்தொடர் நடவடிக்கையும் எடுத்தல் வேண்டும். |
| (ii) | அனைத்து ஆவணங்களினதும் அடிப்படையில் வாடிக்கையாளரின் கையொப்பம் மற்றும் இறப்பர் முத்திரை பொறிக்கப்பட்டிருந்த போதிலும் வாடிக்கையாளர் எப்போதேனும் தமது கையொப்பத்தை பயன்படுத்தியிருக்கவில்லை எனவும் இறப்பர் முத்திரையை வழங்கவோ அல்லது அதனைப் பயன்படுத்துவதற்கு அதிகாரம் வழங்கவோ இல்லை எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | கப்பல் சரக்கு இலிகிதர்களுக்கு பொது மக்கள் முறைப்பாட்டினை அனுப்புவதற்கு முடியாத வகையில் போதியளவு உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறையும் பின்தொடர் நடவடிக்கையும் எடுத்தல் வேண்டும். |

(ஏ) முதலீட்டுச் சபை (BOI) உடன்படிக்கையை மீறல்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| ..................................... | ............................... | ..................... |
| இலங்கை முதலீட்டுச் சபையின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான தங்கொடுவ போசிலேன் தனியார் நிறுவனம் 1998 ஆம் ஆண்டிலிருந்து BOI நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்திருந்த போதிலும் உடன்படிக்கை நிபந்தனை மீறப்பட்டதனால் அந்த நிறுவனத்திற்கு இலங்கை முதலீட்டுச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் | பதில் வழங்கப்படவில்லை. | சுங்க புலனாய்வுக்கு உட்பட்ட நிறுவனம் உரிய காலத்தில் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கை செய்துள்ளதனால் உரிய நிறுவனத்திற்கு தெரியப்படுத்தி முழுமையான புலனாய்வினை மேற்கொள்ளல் |

| | | |
|---|---|---|
| மேலும் நடவடிக்கை எடுக்க முடியாத வகையில் 2017 ஆம் ஆண்டின் போது இலங்கை சுங்கத்தின் TIEP முறைமையின் கீழ் பதிவு செய்வதற்கு வேண்டிக் கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மேற்கூறிய பிரச்சினையான நிலைமையின் அடிப்படையில் இலங்கை சுங்கத்தினால் தங்கொட்டுவ போசிலேன் நிறுவனத்திற்’கு எதிராக புலனாய்வு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும் முதலீட்டுச் சபையிடம் எதுவும் விசாரிக்கப்படாது 1998-2011 ஆண்டுகள் தொடர்பாக கவனம் செலுத்தப்படாது 2012-2017 ஆம் ஆண்டுகளுக்காக மாத்திரம் முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கை செய்யப்பட்டதாகக் கருதி இலங்கை சுங்கத்தினால் தண்டப்பணம் அறவிடப்பட்டிருந்தது. ஒட்டுமொத்த ஆண்டுகளின் எண்ணிக்கை தொடர்பாக இலங்கை முதலீட்டுச் சபையுடன் மதிப்பீட்டுக்கு உட்படுத்தாததன் காரணமாக 2012-2017 ஆண்டுகளுக்காக இழக்கப்பட்ட வரிப்பணம் ரூபா 140,863,563 ஆகக் கருதி அதன் அடிப்படையில் தண்டப்பணமாக ரூபா 1,749,365,082 தொகை தீர்மானிக்கப்பட்டிருந்தது. தொடக்க வரிப் பணத்தையேனும் உள்ளடக்காத வகையில் அதனை மீண்டும் ரூபா 120,000,000 இற்கு குறைத்ததன் அடிப்படையில் இன்னும் ரூபா 104,863,563 நட்டம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தது. | | அல்லது இலங்கை முதலீட்டுச் சபையின் மூலம் புலனாய்வினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது இறுதியில் உள்ளவாறு இலங்கை சுங்கத்தின் அங்கீகரித்த | உங்களின் அவதானிப்புககளுடன் இணங்குகிறேன். | அங்கீகரித்த பதவியணியினருக்கும் உள்ளபடியான |

| | | | |
|---|---|---|---|
| | பதவியினர் எண்ணிக்கை 3075 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கை 2342 ஆக இருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 733 ஊழயர் பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு பல்வேறு முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றன. | பதவியணியினருக்குமிடையே வேறுபாடு இல்லாதிருப்பதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும். அல்லது பதவியணியினர் தேவைப்பாட்டினை மீண்டும் முன்னறிந்து திருத்தம் செய்தல் வேண்டும். |
| (ஆ) | அங்கீகரித்த பிரதி சுங்க அத்தியட்சகர் பதவிகள் 100 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான பதவிகளின் எண்ணிக்கை 112 ஆக இருந்ததனால் அங்கீகரித்த பதவி எண்ணிக்கையை மிகைத்து 12 நபர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். | 2020-02-13 ஆந் திகதிக்கு முன்னர் அமுல்ப்படுத்தப்பட்ட துறைசார்ந்த/ அலுவலகம் சார்ந்த- பிரிவு உத்தியோகத்தர் தொகுதி II இற்கான ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் 376 பிரதி சுங்க அத்தியட்சகர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் 2020-02-13 ஆந் திகதியிலிருந்து அமுல்ப்படுத்தப்படும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட பிரதி சுங்க அத்தியட்சகர் பதவிகளுக்கான (முகாமைத்துவ உதவியாளர் உயர் வகுப்பு சேவைத் தொகுதி) திருத்திய ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பிரதி சுங்க அத்தியட்சகர் பதவிகள் 100 ஆகும். அதன் காரணமாக இவ்வாறு அங்கீகரித்த பதவி எண்ணிக்கையை மிகைத்து பிரதி சுங்க அத்தியட்சகர் பதவிகள் மிகையாக சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் அது தற்காலிகமான நிலையாகும். | அங்கீகரித்த பதவியணியினருக்கும் உள்ளபடியான பதவியணியினருக்குமிடையே வேறுபாடுகள் இல்லாதிருப்பதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும். |